# நமது ஈழநாடு

www.namathueelanadu.com



குரல் 04 மலர் 41 நவம்பர் 2023 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com



Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app

*நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக்கற்களும் விடுதலையையே குறியீடு செய்து நிற்கின்றன. வீதிகளில் சந்துகளில் சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சியங்களாகவே எமக்கு காட்சி தருகின்றன.*

- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்





# விடுதலைத் தாகம் எடுத்துரைத்த மாவீரர் நாள்

கார்த்திகை மாதம் என்றவுடனேயே ஸ்ரீலங்கா அரசுக்கு மாவீரர் நாள் காய்ச்சல் பிடித்துவிடுவது வழக்கமானது. இம்முறையும் மாவீரர் நாள் நெருங்க நெருங்க துயிலும் இல்லங்களின் மீது ஸ்ரீலங்கா அரசுக்கும் படைகளுக்கும் அச்சமும் கிலியும் பெருகத் துவங்கியது. மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவுத் தூபியை அழித்தமை, பணிக்குழுக்களை எச்சரித்தமை, அங்கு சென்ற மக்கள் பிரிதிநிதிகளை விசாரணை செய்து அச்சுறுத்தியமை என்று ஸ்ரீலங்கா அரசு இம்முறை அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டிருந்தது. அத்துடன் மாவீரர் வாரம் நெருங்க இராணுவத்தினரின் நடமாட்டங்களும் வடக்கு கிழக்கில் அதிகரிக்கப்பட்டமையையும் அவதானிக்க இயன்றது.

இத்தகைய தடைகள் தாண்டியும் நவம்பர் 27 மாவீரர் நாளில் ஈழம், சிங்கள தேசத்திற்கும் உலகத்திற்கும் அறிவித்த சேதி வலிமையானது. மாவீரர் நாள் ஈழத் தமிழ் மக்களின் வாழ்விலும் வரலாற்றிலும் மகத்துவமான நாள். இந்த நாளின் மகத்துவம் என்பது உன்னதமும் திவ்வியமும் நிறைந்தது. தமிழர்களின் வரலாற்றில் ஒவ்வொரு ஆண்டும் மாவீரர் தினம் ஒரு வலிமையான சேதியை சொல்லியே கடக்கிறது. ஈழத் தமிழ் மக்களின் சுதந்திர விடுதலைப் போராட்டத்தில் மாண்டு வித்துக்களாக விதைக்கப்பட்ட மாவீரர்கள் தாய நிலத்திற்குள் இருந்தே வெளிப்படுத்தும் தாகம் பெருவலிமை கொண்டது. பல்வேறு அடக்குமுறைகளின் மத்தியிலும் இடம்பெற்ற மாவீரர் நாள் உணர்த்திய சேதி வலிமையானது.



தீபச்செல்வன்

தமிழீழ மாவீரர் நாள் என்பது ஒரு அரசியல் நிகழ்வல்ல. ஸ்ரீலங்கா அரசும் அதன் படைகளும் போர் வெற்றி நாளை ஒரு அரசியல் நாளாகவே கொண்டாடுகிறது. அதன் வழியாக சிறுபான்மை மக்கள் எச்சரிக்கப்படுகின்றனர். ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்காவின் யுத்த வெற்றி வாளேந்தி நிற்கிறது.

தமிழீழ மண்ணில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் இனப்படுகொலைகளை இனியும் அரங்கேற்றுவோம் என்கிற வன்மத்தையும் அச்சுறுத்தலையும் வெளிப்படுத்தும் ஸ்ரீலங்கா யுத்த வெற்றி நாள், விடுதலைப் புலிகளை தோற்கடித்தமை பற்றியும் நாடு கேட்டுப் போராடிய இனத்தை வீழ்த்தியமை பற்றியும் வெற்றிப் புழகாங்கிதம் கொள்கிறது. இதுவே தமிழனத்தை அச்சறுத்துகிறது.

ஆனால் மாவீரர் நாள் என்பது ஈழ விடுதலைக்காக முதல் வித்து விதைக்கப்பட்ட நாள். கண்ணீருக்கும் தாகத்திற்கும் உரிய நாள். இந்த நாளின் வழியாக ஈழத் தமிழ் மக்கள் கனவையும் தாகத்தையும்தான் வெளிப்படுத்துகிறார்கள். மாண்டவர்களை சாட்சியாகக் கொண்டு வாழ்வை உசாவுகிற நாள். இந்த நளை ஸ்ரீலங்கா அரசு புரிந்துகொள்ளத் துவங்குகின்ற தருணம் தான் இலங்கைத் தீவின் அமைதியின் துவக்கமாகயிருக்கும்.

மாவீரர்களின் குரல்களுக்கு செவி சாய்க்கிற நாளில்தான் இந்த தீவின் ஒளி மிளிரத் துவங்கும். ஈழத் தமிழ் மக்களுக்கு மாத்திரமின்றி இந்த தீவிற்கே வெளிச்சம் தரக்கூடியவர்கள் மாவீரர்கள். இவர்களின் முகங்களில் இருந்தே அந்த ஒளி ஒட்டுமொத்த தீவுக்கும் ஊற்றெடுக்கும்.

கடந்த காலத்தில் மாவீரர் நாட்களை நினைகூவுர ஸ்ரீலங்கா அரசு தடைவித்த போது ஈழத் தமிழ் மக்கள் தங்கள் வீடுகளுக்குள்ளும் இதயக் கூடுகளுக்குள்ளும்தான் மாவீரர்களை நினைவேந்தல் செய்தார்கள். அத்துடன் இது ஈழத் தமிழ் மக்களின் தாயக பூமி. இந்தப் பூமியை ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களினதும் இராணுவத்தினதும் ஆக்கிரமிப்பை துரத்தவே மாவீரர்கள் போராடி இந்த மண்ணிலேயே மாண்டு போயுள்ளார்கள்.

எமது மாவீரர்கள் எந்த மண்ணுக்காக போராடினார்களோ அதே மண்ணில்தான் உறங்குகிறார்கள். ஆனால் மாவீரர் நாள் கண்டு கொந்தளிக்கும் சிங்களப் பேரினவாதிகள் சிங்கள தேசத்தை சூறையாடிவிற்றார்கள். நாட்டை விட்டு ஓடினார்கள். சிங்கள மக்களே அவர்களை துரத்தியடித்தார்கள். சிங்கள மக்களின் மனங்களையும் அறியாதவர்கள். கடந்த காலத்தில் சிங்களப் பேரினவாத தலைவர்களை தூக்கி எறிந்த சிங்கள மக்கள் பிரபாகரன் பெயரையும் ஈழப் போராளிகள் பெயரையும் உச்சரித்தனர்.

எங்கள் விழிகள் உடைந்து கரைந்தன அந்த நிமிடத்தில். எங்கள் தேசம் ஒளியினால் எல்லாவற்றையும் வரைந்தது. வடக்கு கிழக்கில் இருந்த முப்பதிற்கு மேற்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் சுடர்கள் நாக்குகளை அகல திறந்து விலாசின.

நவம்பர் 27ஆம் நாளை நெருங்கிய போதே எங்கள் நிலத்தின் துயிலும் இல்லங்களை துப்புரவு செய்து, மாவீரர் நாள் ஏற்பாட்டை தாயக மக்கள் தன்னெழுச்சியாக மேற்கொள்ளத் துவங்கினர். எங்கள் நிலத்தின் ஒவ்வொரு மனிதரும் அங்கு வந்து தொண்டு செய்தனர். யாரும் யாரையும் அழைக்கவில்லை. அவர்கள் பிள்ளைகளைத் தேடி வந்தனர். அவர்கள் உரித்துக் கொண்டு உணர்ந்து சேவை செய்தனர்.

அதேபோல நவம்பர் 27ஆம் திகதி மாலை 6.5 மணியை நெருங்குவதற்கு முன்பாகவே வடக்கு கிழக்கில் இருந்த மக்கள் அனைவரும் துயிலும் இல்லங்களை நோக்கி வரத் துவங்கினார்கள். அவர்களிடம் எந்த ஆயுதமும் இருக்கவில்லை. எந்த வார்த்தைகளும்கூட இருக்கவில்லை. மௌனமாக தீபங்களை சுடரச் செய்தார்கள். அந்த மௌனம் ஒரு பெரும் வலிய செய்தியை சொல்லியது. அந்த மௌனம் சிங்கள தேசத்தின் அர்த்தமற்ற கூச்சல்களைப் போலன்றி ஆழமான வலி மிகு தாகத்தை சொல்லியது. ஒரு மகத்துவமான விடுதலைப் போராட்டம், அதில் மாண்டவர்களின் குழியில் எழும் கனல், அப் போராட்டத்தின் மக்களின் அனல் மிகுந்த தாகம் அது.

புலிகளும் மக்களும் ஒன்று எனக் கருதியமை காரணமாகவே போரில் புலிகளின் பெயரால் இனத்தை அழித்த ஸ்ரீலங்கா அரசு அல்லது பேரினவாதிகள் ஒன்றை உணர வேண்டும். விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்றே நீங்கள் அழையுங்கள். உங்கள் கூற்றுக்களின்படி புலிகளை நினைவுகூர்கின்ற மக்களும் பயங்கரவாதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

அவர்களின் தாயகத்தில் அவர்களின் பயங்கரவாதிகளை நினைகூர்வதாகவே இருக்கட்டும். இத்தனை பேரழிவு யுத்தத்திற்குப் பிறகும் இன ஒடுக்குமுறைகள் அச்சுறுத்தல்களுக்கும் பிறகும் புலிகளை நினைவுகூர்ந்து அணைத்துக்கொள்ளுகிற மக்களை பிரிந்து சென்று வாழ்வதற்கு இடமளியுங்கள். மாபெரும் இனப்படுகொலையை செய்த ஸ்ரீலங்கா அரசின் கீழ் ஈழ மக்கள் ஒருபோதும் ஒடுங்கிவிடப் போவதில்லை. இதுவே மாவீரர் தினம் அறிவித்த சேதியாகும்.

விடுதலைப் புலிகள் உன்னதமானவர்கள், அவர்கள் போராடியதும் மாண்டதும் தமக்காக அல்ல, தம் தாய் நிலத்திற்காகவும் தாயக மக்களுக்காகவுமே. அதனால்தான் ஒட்டு மொத்த ஈழ நிலமும் கடந்த நவம்பர் 27ஆம் திகதி ஈழ மண்ணில் திரண்டிருந்தது. மாவீரர்களைக் குறித்து சிங்கள மக்கள் உணர்ந்தும் ஏற்றும்கொள்ளுகின்ற காலமொன்று வரவேண்டும்.

அதற்கான களங்களாக மாவீரர் துயிலும் இல்லங்கள் இருக்கின்றன. அங்கு சிங்கள அரசும் இராணுவமும் ஒடுக்குமுறைகளை மேற் கொள்ளாமல் நடந்த போரின் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். ஈழத் தமிழ் மக்களின் மனசாட்சியின் குரல்களை ஈழக் கல்லறை களிடமி ருந்து செவிசாய்க்க வேண்டும்.



# உயிரைக் குடித்த பாதுகாவலர்கள்

**தாயகன்**

என்னை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு வைத்து கடுமையாக தாக்கினர். கைகள் இரண்டையும் பின்புறமாக கட்டி தூக்கி கடுமையாக தாக்கினார்கள்.

துணி ஒன்றினால் முகத்தினை மூடிக் கட்டி தண்ணீர் ஊற்றி தாக்கினார்கள். பெற்றோல் ஊற்றிய பொலித்தீன் பை ஒன்றினை முகத்தில் போட்டு சித்திரவதை புரிந்தார்கள்.

பின்னர் எனக்கு குடிக்க சாரயம் தந்தார்கள். தாக்குதல்கள் சித்திரவதைகள் தொடர்பில் வெளியில் சொல்ல கூடாது என கடுமையாக என்னை மிரட்டினார்கள்.

தொடர்ச்சியாக அடித்தார்கள். எனது கைகள் பாதிக்கப்பட்டன. உடல் மோசமாகவலித்தது. என்னால் தாங்கமுடியவில்லை என்று கூறியபோதும் விடவில்லை. தொடர்ச்சியாக தாக்கினார்கள். எச்சரிக்கை விடுத்து விடுத்து அடித்தார்கள. அதன் பின்னர் என்னால் சாப்பிடக் கூட முடிந்திருக்கவில்லை”

மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் வைத்தியசாலையில் உள்ள படுக்கையில் இருந்தவாறு சாட்சியமளிக்கின்றார் 25வயதான நகாராசா அலெக்ஸ்.

யாழ்ப்பாணம், சித்தங்கேணி கலைவாணி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட நாகராசா அலெக்ஸ் கடந்த எட்டாம் திகதி வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் துணைக்குச் சென்ற அவருடைய சகபாடியுடன் கைது செய்யப்பட்டார்.

திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவர்களாக இருவரும் காணப்படுகின்றனர் என்ற சந்தேகத்தில் இருவரும் கைது செய்யப்பட்டு, வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தனர்.

மறுநாள் ஒன்பதாம் திகதி நாகராசா அலெக்ஸ{ம் அவருடன் கைது செய்யப்பட்ட சகபாடியும் சித்தங்கேணியில் உள்ள அவரது வீட்டுக்கு பொலிஸாரால் அழைத்து வரப்பட்டு வீடு முழுவதும் இரண்டு மூன்று மணிநேரமாக சல்லடை போட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் அலெக் தனது பெற்றோரிடத்தில் குடிப்பதற்கு தண்ணீர் கேட்டபோது அதனை அவர்கள் வழங்கவும் தண்ணீர் வழங்கிய செம்பைத் தட்டிவிட்டு விசாரணைகள் முடித்துவிட்டு அனுப்புக்கின்றோம் என்று கூறி வட்டுக்கோட்டைப் பொலிஸார் மீண்டும் அவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டனர்.

அப்போது, அலெக்ஸ் தனது கையில் காயங்கள் இருப்பதை வீட்டுக்காரர்களுக்கு தெரிவித்ததோடு கைகள் வலிப்பதாகவும் கூறியிருக்கின்றார். எனினும் அவரால் அதற்கு மேலாக எந்தவிதமான தகவல்களையும் வழங்க முடிந்திருக்கவில்லை.

பத்தாம், மற்றும் பதினோராம் திகதிகளில் அலெக்ஸின் தயாரும், சகோதரரும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் நெடுநேரமாக காத்திருந்தபோதும் அவர்களால் அலெக்ஸைப் பார்க்க முடிந்திருக்கவில்லை. ஆனால் அலறல் சத்தம் மட்டும் தான் அவர்களுக்கு இறுதியாகக் கேட்டுள்ளதாக கூறுகின்றார்கள்.

தொடர்ச்சியாக அலெக்ஸைக் காண்பிக்குமாறு கோரியபோதும் பொலிஸார் காண்பிப்பதற்கு மறுத்தமையால், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்திற்குச் சென்று பெற்றோர் முறைப்பாட்டை பதிவு செய்தனர்.






> “சிறிலங்காவில் சித்திரவதையால் பொலிஸ் நிலையங்களிலும், சிறைகளிலும் நிகழும் மரணங்கள் தொடர்கதையாக இருக்கையில் அதற்கான நீதிப்போராட்டமும் நீண்டுகொண்டே உள்ளது”

இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதன் பின்னர் வழக்கம்பரை பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்ததுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் 12ஆம் திகதி அவர்கள் இருவரும் முற்படுத்தப்பட்ட போது, நீதிமன்றம் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

நீதிமன்றில் அலெக்ஸ{ம் அவரது சகபாடியும் முற்படுத்தப்பட்ட போது, அவர்கள் இருவரும் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலையே இருந்தனர் என்று உறவினர்கள் உறுதிபடத் தெரிவித்தனர். எனினும் அதன் பின்னர் அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படாது சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் குறித்த இருவரும் தடுத்து வைக்கப்பட்டபோதும் உறவினர்கள் அவர்களை பார்வையிடுவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த 18ஆம் திகதியளவில் உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில், சிறைச்சாலை நிருவாகத்தின் அனுமதியுடன் அலெக்ஸ் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அப்போது தான் அவர் சாட்சியமளிக்கும் காணொளி பதிவாகியது.

அதுமட்டுமல்ல, போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைகள் வழங்கப்பட்டபோதும், அச்சிகிச்சைகள் அனைத்தும் பலனின்றி 19ஆம் திகதி அலெக்ஸ் உயிர் துறந்தார்.

இதன்பின்னர், அலெக்ஸின் மரணம் தொடர்பான உடற்கூற்று பரிசோதனை 20ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சட்ட மருத்துவ அதிகாரி வைத்தியர் உருத்திரபசுபதி மயூரதனினால் மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு அமைவாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், உடலில் அடிகாயங்கள் காணப்பட்டமை , சித்திரவதை மற்றும் தாக்குதலுக்கு உள்ளானமையால் சிறுநீரகம் பாதிக்கப்பட்டமையால் உயிரிழப்பு ஏற்பட்டது, ஆகவே இதுவொரு இயற்கை மரணம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சடலம் பெற்றோர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டு 21ஆம் திகதி இறுதிக் கிரியைகள் நடைபெற்றுள்ளன. இளவாலை வெல்லா வெளி மயானத்திற்கு இறுதிக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்ட போது அலெக்ஸின் உடலத்துடன் வீதியெங்கும் கூடிய பொதுமக்கள் போராட்டத்தினையும் முன்னெடுத்தனர்.

அலெக்ஸ் உயிரிழப்புக்கு பொறுப்பு கூற வேண்டும். நீதி வழங்கப்பட வேண்டும் என்று ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் எழுதப்பட்ட பதாகைகள் தாங்கியவாறும், வட்டுக்கோட்டை பொலிஸாரின் அராஜகம் ஒழிகவென்ற சிங்கள மொழியிலும் பதாகைகள் தாங்கியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஈற்றில் அலெக்ஸின் இறுதிக்கிரியை நூற்றுக்கணக்கானவர்களின் கண்ணீருக்கு மத்தியில் நிகழ்ந்தேறியது. இதேநேரம், அலெக்ஸ{டன் கைது செய்யப்பட்ட அவரது சகா, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அலெக்ஸின் மரணத்தக்கு நீதி நிலைநாட்டப்படுமா என்ற கேள்விகள் அதிகரித்துள்ளன. ஏனென்றால் இதுவரையில் அலெக்ஸினை கைது செய்து தடுத்து வைத்து சித்திரவதைப்படுத்திய பொலிஸார்கள் என்று சந்தேகப்படும் நான்கு உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

அதேநேரம், குறித்த நான்குபேரும் தம்மால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு இடையூறாக அமைந்துவிடக்கூடாது என்று கருதியே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களிடத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள ஜெனரத் தெரிவிக்கின்றார்.

ஆரம்பத்தில், இந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்காக பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரட்னவின் பணிப்பில் குழுவொன்று வருகை தரும் என்று கூறப்பட்டாலும் தற்போது வரையில் அவ்வாறான குழுவொன்று வருகை தரவுமில்லை. விசாரணைகளை முன்னெடுக்கவுமில்லை.

அதேநேரம், விடயத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகக்குறைந்தது தற்காலிகமாக சேவையில் இருந்து இடைநிறுத்தப்படவும் இல்லை. அவர்கள் இன்னமும் பிறிதொரு இடத்தில் சேவையில் தொடர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே, வேலியே பயிரை மேய்ந்த கதையாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் நிகழ்ந்த சம்பவத்தினை யாழ்.மாவட்ட பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தி உண்மைகளை கண்டறிந்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதென்பது காணல் நீராகும் செயற்பாடே ஆகும்.

மேலும், அலெக்ஸின் மரணம் யாழ்.மாவட்ட நீதிவான் நீதிமன்ற எல்லைக்குள் நிகழ்ந்தேறியமையால் குறித்த விடயம் சம்பந்தமான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டிய நியாயாதிக்க அதிகாரத்தை நீதிவான் ஆனந்தராஜாவே கொண்டிருக்கின்றார்.

இதனால் அவர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் விளக்கமறியல் பகுதி, யாழ்.சிறைச்சாலை உள்ளிட்ட பகுதிகளுக்கு நேரில் விஜயங்களைச் செய்துள்ளார். மேலதிகமாக உடற்கூற்று அறிக்கையை இறுதி செய்த வைத்திய அதிகாரி உள்ளிட்டவர்களையும் சந்தித்துள்ளார்.

இதனைவிடவும், அலெக்ஸின் நண்பரையும் நீதிமன்றில் வாக்குமூலமளிப்பதற்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். எவ்வாறாக இருந்தாலும் இனி, நீதிமன்ற விசாரணைகள் எவ்வளவு காலத்தில் நிறைவடையும். அப்போது சம்பவத்துக்கு பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்களா என்பதெல்லாம் கேள்விக்குரிய விடயங்கள்.

அவ்வாறு பொலிஸாரே குற்றவாளிகள் என்று அடையாளம் காணப்பட்டாலும், தண்டனை அளிக்கப்பட்டாலும், மேன்முறையீடு செய்யப்படும். பின்னர் வழக்கு கொழும்புக்கு மாற்றப்படும். அங்கு சென்று நீதிப்போராட்டம் செய்தால் கூட ஈற்றில் ஜுரிகள் சபையோ அல்லது ஜனாதிபதியின் பொதுமன்னிப்போ தான் முடிவாக அமையும். இது ஒட்டுமொத்த தமிழினத்தின் கடந்த கால அனுபவம்.

ஆகவே, பொலிஸ் நிலையங்களிலும், சிறைச்சாலைகளிலும் தமிழர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் சித்தரவதைகள், படுகொலைகளுக்கு எதிராக ஏகோபித்த குரல் அவசியமாகின்றது. அத்துடன் சர்வதேச மயப்படுத்தலும் தேவையாக உள்ளது.

தற்போது புலம்பெயர் தேசத்தில் வாழும் சித்தங்கேணி மக்கள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அலெக்ஸின் நோக்கி விடயங்களை நகர்த்தவுள்ளனர். அதுவொரு காத்திரமான செயற்பாடாக அமையும்.

அதேபோன்று தான் ஏனைய அரசியல், சிவில் தரப்புக்கள் அனைத்தும் கூட்டிணைந்த நகர்வொன்றைச் செய்தால் மட்டுமே இவ்விதமான சம்பவங்கள் மீள நிகழாதிருக்கும். தண்டனையிலிருந்து விலக்கழிக்கும் கலாசாரமும் முற்றுப்பெறும்.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 04 மலர் 41 நவம்பர் 2023 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# மறவர்களுக்கு வீரவணக்கம்

“எமது மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழவேண்டும். இந்த இலட்சியம் நிறைவேறவேண்டுமாயின் நாம் போராடியே ஆகவேண்டும்” என்ற தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் சிந்தனையில் உருவாகிய இனவிடுதலைப் போராட்டத்தில் மடிந்தவர்கள் ஏராளம்.

நாம் துணிந்து போராடுவோம், சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கின்றது, வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கின்றது என்று அந்த தலைவனின் வழிகாட்டலுக்கு அமைவாக தமது இன்னுயிர்களை துச்சமென மதித்து துறக்கத் துணிந்து களமாடிய இளைஞர்களும், யுவதிகளும் ஆயிரமாயிரம் பேர்.

சிங்கள தேசிய, பௌத்த வாதத்தின் அடக்குமுறைக்குள் முடங்கி தமிழினம் தனது அடையாளங்களையும், பூர்வீகங்களையும், நில,புலங்களையும் இழந்து ஏதிலிகளாக இரண்டாந்தரப் பிரஜைகளாக நின்றுவிடக்கூடாது என்பதை நெஞ்சில் நிறுத்தி ஆயுதமேந்திக் களமாடியவர்கள் தான் அவர்கள்.

தாம் வாழும் காலத்தில் விடுதலையை பெற்று சுதந்திரத்திரனை அடைவோம் என்பது கனவாக இருந்தாலும், தம் இனமும், எதிர்கால சந்ததியும் நிம்மதியா இருக்க வேண்டும் என்பதற்காக சமர்களமாடிய பொதுநலவாதிகள் தான் அவர்கள்;.

சுதந்திரத் தமிழீழத்தில் சுற்றித்திரிய வேண்டும் என்பது சுதந்திரத் தாகமெடுத்த அந்த வீரர்களின் கனவாக இருந்தாலும், தாம் மண்ணில் மடிந்தாலும் தங்களின் ஆன்மாக்களின் சுவாசம் சுதந்திரத்தினை அனுபவிக்கும் என்ற அதீத நம்பிக்கை கொண்டவர்கள் அவர்கள்.

அத்தகைய புனிதர்கள் பூஜிக்கப்பட வேண்டியவர்கள். என்றும் போற்றப்பட வேண்டியவர்கள். அவர்களின் தியாகத்துக்கு ஈடு இணையே கிடையாது. அவர்களுக்கு நிகரான சக்திகளே இப்பாரில் இல்லை.

அத்துணை பெருமை கொண்டவர்களை நினைவுகூரக்கூடாது என்று தமிழர் தாயகத்தில் சிங்களப் பேரினவாதமும், பௌத்த மேலாதிக்க வாதமும் இம்முறையும் அடக்குமுறைகளை தீவிரமாக பிரயோகித்தது.

ஆனால், முடியவில்லை. இலட்சியத்தை இதயத்தில் இருத்தி இன்னுயிர்களை தியாகம் செய்த அந்த மாவீர மறவர்களை ஒட்டுமொத்த தமிழினமும் உணர்வெழுச்சியுடன் நினைவு கூர்ந்தது.

கார்த்திகை மாதத்தில் கார்த்திகைப் பூக்களுக்கு மத்தியில் சுடர்கள் ஒளிவிட கண்ணீரால் தமிழீழ புனித மண் நனைந்திர வீரமறவர்களின் வீரத்தியாகங்கள் நெஞ்சில் நிறுத்தப்பட்டு பரம்பரைகள் கடந்தும் உணர்வு பீறிட்டது.

இந்தவொரு செய்தியே தமிழினம் இன்னமும் விடுதலைத் தாகத்துடன் தான் இருக்கின்றது என்ற செய்தியை தென்னிலங்கைக்கும் ஒட்டுமொத்த சர்வதேசத்துக்கும் எடுத்துக் கூறியிருக்கின்றது.

ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல..!

அந்த சாவு ஒரு சரித்திர நிகழ்வு..!

ஒரு உன்னத இலட்சியம் உயிர் பெரும் அற்புத நிகழ்வு..!

உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை..!

அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை..!

அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்று சக்தியாக மற்றவர்களை பற்றி கொள்கிறது..!

ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவை தட்டியெழுப்பி விடுகிறது..!

என்ற விடுதலைத் தலைவனின் கூற்றுக்களை மீளவும் மனதில் நிறுத்தி தமிழரின் தாகம் தமீழ தாயகம்.... என்பதற்காய் உரமிடுவோம்.

## தடம்மாறா தலைமகனே தனித்துவமாய் வாழிய நீ...!



வல்வைக் கரையோரம்
வந்துதித்த சூரியனே
எல்லை மீட்பதற்காய்
வில்லெடுத்த சந்திரனே

நற்றமிழை காப்பதற்காய்
நெற்றிக்கண் திறந்து தினம்
கொற்றவையின் மகவாகி
கூற்றெதிர்த்த கோமானே

வற்றாத நீர்ச்சுனையே
வாகையுடன் வாழிய நீ ..!

மாயைகளை தெளிவாக்க
மண்மீது மலர்ந்தவனே
தானைத் தளபதியே
தன்மான பெரும் புலியே

ஊர்கூடி வந்துள்ளோம்
உத்தமனை வாழ்த்தவென
தேர்கொண்டு தான் வந்தோம்
தெய்வமுனை போற்றவென

உனக்காக உயிரீக்கும்
உயர்ந்தபடை நீ கண்டாய்
தனக்காக வாழாத
தலைவனென பெயர்கொண்டாய்


சிங்கத்தின் செருக்கடக்கி
சிரிப்புடனே நகர்ந்தவனே
வங்கத்தின் வஞ்சங்களை
வகைவகையாய் தெரிந்தவனே

அஞ்சாது களமேகி
அடலேறாய் நிமிர்ந்தவனே
துஞ்சாது நஞ்சணிந்து
தூயவனாய் மிளிர்ந்தவனே

தடம்மாறா தலைமகனே
தனித்துவமாய் வாழிய நீ...!

– மது நோமன்

## மறைந்த காட்டுனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து



# தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரைகள்



**தமிழினத்தின் பெரும் எதிரியான சிங்களதேசம் மட்டுமல்லாது ஒட்டு மொத்த உலக நாடுகளும் பெரும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் அந்த ஒற்றைநாளே ஏன் எண்ணிக்கொண் டிருக்கும் மணித்துளிகள் என்றே சொல்லலாம் தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாளில் ஆற்றும் உரை. தமிழ் தேசிய விடுதலைக்காக தமது இன்னு யிர்களை அர்ப்பணித்து போராடும் இயக்கத்தின் நிலைப்பாட்டையும் தன் தாயக மக்களின் அபிலாசைகளையும் தெளிவாக உலக நாடுகளிற்கு விளக்கி நிற்கும், அவரது ஒவ்வொரு ஆண்டின் மாவீரர் நாள் உரைகள். அந்தவகையில் 20 ஆண்டுகளாக அவர் ஆற்றிய ஒப்பற்ற பொக்கிசமான உரைகளிலிருந்து சிறு துளிகளை இங்கு தொகுத்துள்ளோம்.**

## 1989

'பிரபாகரன் தனிமனிதன் அல்ல ஓர் இனத்தின் பிரதிநிதி. பிரபாகரன் தமிழினத் திற்கு துரோகம் செய்தால் பிரபாகரனும் சுட்டுக்கொல்லப்படவேண்டியவரே|

இந்தியா ஒரு இயக்கத்தை மட்டும் நம்பியிருக்க கூடாது என்று எண்ணியது. ஆதனால் எல்லா இயக்கங்களுக்கும் பயிற்சியளித்து தமக்கு ஒத்துப்போகும் இயக்கங்களை பாவித்து ஒத்துவரா இயக் கங்களை அழிக்க எண்ணியது. அங்கு தான் இந்தியா தவறிழைத்தது.'

## 1990

'எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டி ருக்கிறது. இவர்களது இறப்புக்கள் அர்த் தமற்ற இழப்புக்கள் அல்ல. இந்த வீரர் களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போரா ளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டது.

இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள். சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமற வர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற் காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள இந்த மகத்தான தியாகிகள் காலம் கால மாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப் பட வேண்டியவர்கள்.'

## 1991

'இராணுவ அடக்குமுறை என்ற அணு குமுறை மூலம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை சிங்கள அரசு இன்னும் தெரிந்து கொண்ட தாகத் தெரியவில்லை. இராணுவ மேலா திக்கத்தை எட்டிப் பிடிக்க வேண்டும் என்ற ஆதிக்க வெறி இன்னும் சிங்கள ஆளும் வர்க்கத்திடமிருந்து அகன்று போனதாகத் தெரியவில்லை.

இராணுவ ஆதிக்கத்திற்கும், அழுத் தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக்கொடுத்ததேயில்லை. கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை. எமது இயக்கத்தின் இந்த உறுதிப்பாட்டை உலகத்தின் மிகப்பெரிய இராணுவமே பரீட்சித்துப் பார்த்து தோல்வி கண்டது. சிங்கள இரா ணுவமும் இந்த வரலாற்றுத் தவறை சந் திக்கத்தான் நேரிடும்.'

## 1992

'எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் நிதியையும் அள்ளி வழங்குகின்றது. நாம் உலகத்திடம் கை நீட்டி நிற்கவில்லை. எவரிடம் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில் சொந்த மக்களில் சொந்த கால்களில் தங்கி நிற்கிறோம்.'

## 1993

'எமது இயக்கம் சமாதான முயற்சிக்கு தடையாக இருந்ததில்லை. சிங்கள அர சுக்கு எத்தனை சந்தர்ப்பங்களை வழங் கினோம். திம்பு முதல் கொழும்பு வரை பேச்சுக்கு சென்றோம். ஆனால் தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எத னையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியை கைவிட்டு போர்க்களத்தில் தீர்வு காண விரும்பியது. தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதம் என சித்தரித்துக்காட்டியது. எல்லாவற் றுக்கும் மேலாக இனப்பிரச்சினை என் பதே இல்லை என பகிரங்கமாக பிரக டணம் செய்துள்ளது.'

## 1994

'சமாதான வழியில் தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு முயற்சிகளை எடுக்கும் எனில் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசியப்போராட்டத்தின் இன் றைய வளர்ச்சியை கருத்தில் கொண்டு உருப்படியான சுயாட்சி திட்டங்கள் முன் வைக்கப்படுமாயின் நாம் அதனை பரிசீ லனை செய்ய தயாராக இருக்கின்றோம்.'

## 1995

'யாழ்நகரையும் வலிகாமப்பகுதி யையும் ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்னர் ஒட்டுமொத்த மக்களும் சென்ற வரலாற்று நிகழ்வானது அரசின் தந் திர உபாயத்திற்கு சாவுமணி அடித்தது. அரசின் போர் நடவடிக்கையையும் அதற்கு அரசு கற்பிக்கும் அபத்தமான கார ணத்தையும் யாழ்ப்பாண தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்துவிட்டனர் என்ப தையே இந்த இடம் பெயர்வு நிகழ்வு எடுத்து காட்டுகிறது.'

## 1996

மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும் புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிக்கா, புலிகள் இயக்கம் ஆயுதங் களை சரணடைவு செய்யவேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனைக ளையும் முன்வைக்கின்றார். எந்தவொரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப்பூட்டும் நிபந்த னையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

## 1997

'நாமும் மனிதர்கள். மனிதர்களுக்கான அடிப்படை உரிமைகளைக் கொண்ட ஒரு மனித சமூகம். தனித்துவமான மொழி யையும், பண்பாட்டு வாழ்வையும், வர லாற்றையும் கொண்ட ஒரு தனித்துவ மான இனத்தைச் சேர்ந்த மனிதர்கள் நாம். எம்மை ஒரு மனித சமூகமாக, தனித் துவப் பண்புகளைக் கொண்ட மக்களாக ஏற்குமாறு கேட்கிறோம். எமது அரசியல் வாழ்வை நாமே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை எமக்குண்டு. இந்த உரிமையின் அடிப்படையில் நாமே எம்மை ஆளும்வ கையில் ஒரு ஆட்சிமுறையை அமைத்து வாழவே நாம் விரும்புகிறோம்.'

## 1998

'எந்தவோர் அரசியற் தீர்வுத் திட்டத் திற்கும் தமிழரின் தாயகம் அடிப்படை யானது. தமிழரின் நிலமானது தமிழரின் தேசிய வாழ்விற்கும் தேசிய தனித்துவத் திற்கும் ஆதாரமானது. தமிழர்கள் வர லாற்று ரீதியாக வாழ்ந்துவரும் தாயக நிலத்தை அங்கீகரிக்காத எந்தவொரு திட்டமும் தமிழரின் தேசியப் பிரச்சி னைக்குத் தீர்வாக அமையாது.'

## 1999

~போரியற் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரயகரமான வளர்ச்சி யையும் முதிர்ச்சியையும் இந்த ஓயாத அலைகள் மூன்று என்ற வன்னிப் பெரும் சமர் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியி ருக்கிறது.

## 2000

~எமது விடுதலைப் போராட்ட வர லாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப் புமுனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாத னையை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாசார தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தை திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட் கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும்.|

## 2001

~விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால் தான் இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப் புண்டு. இப்படியான சூழ்நிலையில் சிறி லங்கா அரசின் அழுத்தத்திற்கு இணைந்து மேற்குலக நாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதனா பேச்சிற்கும் சமாதான வழியிலான தீர்வுக்கும் வழி கோலப்போவதில்லை.|

## 2002

~தமிழர் தாயகத்தில் அமைதிநிலை தோன்றிய போதும் இயல்புநிலை தோன் றவில்லை. உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை சமூக பொருளாதார பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயு தப்படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன.

## 2003

'முடிவில்லாத ஒரு துன்பியல் நாட கமாகத் தமிழரின் இனப் பிரச்சினை தொடர்கிறது. எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆளும்கட்சி முயற்சிப்பதும் எதிர்க்கட்சி எதிர்ப்பதும் பின்பு எதிர்க் கட்சி ஆளும் கட்சியாக மாறி மீண்டும் அதே முயற்சியும் அதே எதிர்ப்புமாக இந்தச் சிங்கள அரசியல் வரலாற்று நாடகம் தொடர்ச்சியாக ஒரே பாணியிற் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக மேடையேறி வருகிறது.

இலங்கையில் மாறிமாறி ஆட்சிபீடம் ஏறும் இரு பெரும் சிங்கள அரசியற் கட்சிகளுமே தமிழர்களுக்கு விரோத மான இந்த விபரீத நாடகத்தின் இயக் குனர்கள். இந்த இனவாத நாடகத்தின் கதாநாயகர்கள் காலத்திற்குக்காலம் மாறி யபோதும் கதையின் கருப்பொருள் மாற வேயில்லை'

## 2004

சிறிலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங்ட னில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றியது. இதனால் சமநிலைப்பங்காளிகள் என்ற தலை மையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையில்தான் பேச்சுக் களை தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப் தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத் தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து சமா தான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து விட நாம் விரும்பவில்லை.

## 2005

'தமிழரது இருப்பு நிலைபற்றிய உண் மையைக் கிரகித்து, அவர்களது அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளச் சிங்க ளத்தேசம் மறுத்து வருவதாலேயே தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினை தீர் வின்றி, முடிவின்றிச் சிக்கலடைந்து இழு பட்டு வருகிறது. சிங்கள மக்களின் மகா வம்ச மனவமைப்பில், அவர்களது சமூகப் பிரக்ஞையில், அவர்களது அரசியல் கருத் துலகில் அடிப்படையான மாற்றம் நிக ழுமென நாம் எதிர்பார்க்கவில்லை. சிங் கள – பௌத்த மேலாண்மைவாதத்தின் வீச்சும் வலுவும் தணிந்துபோகவில்லை.'

## 2006

'தமிழினம் விடுதலைப் பாதையில் வீறுகொண்டெழுந்திருக்கின்ற இந்தப் பெருமைமிகுந்த வரலாற்றுக் காலகட் டத்தில் உலகத்தமிழினத்தின் உதவி யையும் பேராதரவையும் நாம வேண் டிநிற்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்திலே எமது புலம்பெயர்ந்த உறவுகள் காலங்கா லமாக விடுதலைப் போராட்டத்திற்குச் செய்துவரும் பெரும் பங்களிப்பிற்கும் உதவிகளுக்கும் எனது அன்பையும் நன் றியையும் தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்தும், உங்கள் தார்மீகக் கட மையை ஆற்றுமாறு வேண்டுகிறேன்.'

## 2007

'புலம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் தாம் வாழும் நாடுகளிலே பலம் பொருந்திய சக்தியாக நின்று, தமிழீழ விடுதலைப் போருக்கு உதவி வருவ தையும் அரசியல் ஆதரவைத் திரட்டிவ ருவதையும் சிங்களத் தேசத்தாற் பொறுத் துக்கொள்ள முடியவில்லை. சிங்களப் பேரினவாதத்தின் கோரப்பிடிக்குட்சிக்கி, எம்மக்கள் அழிந்துவருவதையும் அந்தப் பேரழிவைத் தடுக்க, புலம்பெயர்ந்த மக்கள் அரசியற் போராட்டங்களையும் மனிதாபிமானப் பணிகளையும் மேற் கொண்டு வருவதையும் சிங்களப் பேரினவாதத்தாற் சகிக்கமுடியவில்லை.'

## 2008

'இந்த வரலாற்றுச் சூழமைவில், தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந் தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குர லெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன் போடு வேண்டுகிறேன்.

அத்துடன், தங்களது தாராள உதவி களை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக் குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள் கிறேன். இந்த சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன் னெடுத்து வருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தின ருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல் களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்திய இலட்சியத் தீயில் தம் மையே அழித்துச் சரித்திரமாகிவிட்ட எமது மாவீரர்கள் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோமென உறுதியெடுத்துக்கொள்வோமாக.




# மாவீரர்களை நினைவில் கொள்ளல் : முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள்

**செல்வழகன்**

இம்முறையும் பல்வேறு தடைகள் மத்தியிலும் மாவீரர் தினத்தை உணர்வெழுச்சியுடன் உலகெங்கும் வாழும் ஈழத்தமிழ் மக்கள் அனுஸ்டித்திருக்கின்றனர். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எல்லா பொலிஸ் நிலையங்களில் இருந்தும் மாவீரர் நாளை அனுஸ்டிப்பதற்கெதிராக பொது அமைதிக்குப் பங்கம் நேர்வதாகத் தெரிவித்து பொலிசார் நீதிமன்றங்களை நாடியிருந்தனர். சில இடங்களில் தடையுத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான பொலிசாரின் மனுக்கள் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டு விட்டன.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நிழல் அரசாங்கத்தை நிறுவி பரிபாலனத்தை மேற்கொண்ட காலப்பகுதியில் தாயகமே உணர்வெழுச்சியுடன் பொங்கிப் பிரவகிக்கும். திட்டமிடப்பட்ட ஒழுங்குமுறையில் தேசந் தழுவிய வகையில் நேரந் தவறாமல், ஒழுங்கு குலையாமல் நிகழ்வுகள் நடந்தேறும். பிரதான ஈகச்சுடர்களைத் தளபதிகள் ஏற்றி வைக்க, மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் கல்லறைகளின் முன்பாக சுடர்களை ஏற்றுவர். அந்த இடம் முழுவதும் கண்ணீரால் குளிக்கும்.

2009ற்குப் பின்னர் நீண்ட காலம் மாவீரர் தினத்தை அனுஸ்டிப்பதற்கு பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நல்லாட்சி அரசாங்க காலத்தில் இதற்கான வெளி கொஞ்சம் இலகுவாக்கப்பட்டிருந்தது. ஆனால் துரதிஸ்டம் மாவீரர்கள் பணிக்குழுக்கள் ஊடாக இதனை முன்னெடுப்பதில் அரசியல் கட்சிகளின் தலையீடு பெரிதானது. பாராளுமன்ற சிறப்புரிமையால் அவர்களால் பாராளுமன்றத்தில் எதையும் முழங்க முடிந்தது. அந்த வாய்ப்பு வெளியிலும் அவர்களுக்கு இருந்தது. எனவே, அவர்களைச் சில விடயங்களுக்கு சார்ந்திருக்கவும் வேண்டியிருந்தது.

இப்போது அரசியல் கட்சிகள் சிலவும், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் தமது அரசியல் ஆதாயத்துக்கான முதலீடாக தியாகி திலீபன் நினைவுதினம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் நினைவேந்தல் என்பவற்றை முன்னெடுக்க விழைகின்றனர். அதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. அவர்களுக்கு மட்டுமல்ல இந்தத் தேசத்தில் உள்ள யாருக்கும் அந்த உரிமையுண்டு. ஏனெனில் மரணித்தவர்கள் இந்தத் தேசத்துக்குப் பொதுவானவர்கள். இந்தத் தேச விடுதலைக்காக ஆகுதியானவர்கள்.

ஆனால் இந்த வீரமறவர்களை வைத்து பிழைப்பு அரசியல் செய்வதற்கு யாருக்கும் உரிமையில்லை. அதைத்தான் இங்குள்ள சிலர் செய்ய முயல்கின்றனர். அது கண்டிக்க வேண்டியது. குறிப்பாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக தம்மை வெளிப்படுத்தும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் தாம் மட்டுமே தூய தமிழ்த் தேசியவாதிகள் என்றும், ஏனையோர் துரோகத்தனங்களில் ஈடுபடுபவர்கள் என்றும் கூற முற்படுகின்றனர். கொடிகாமம் உள்ளிட்ட சில இடங்களில் ஏனைய கட்சியினரின் கொடிகளை அறுத்ததாகவும் ஒரு குற்றச்சாட்டு உள்ளது. ஜனநாயகப் போராளிகள் கட்சியைக் கூட அவர்கள் அவ்விதமாகவே நோக்குகின்றனர்.

அதேபோன்றே ஒவ்வொரு அரசியல்வாதியும் செயற்படுகின்றனர். விடுதலைப் புலிகளின் வன்முறைப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை என்று சொன்ன சுமந்திரனும் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பில் கலந்து கொண்டு உதவிகளை வழங்கும் செய்திகளை அவரைப் 'புகழும்' யாழ்ப்பாணத்திலுள்ள இரு பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன. அவரது சகாவான முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர் சாணக்கியன் கூட தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நின்று பேட்டியளிக்கிறார். அதைக்கூட நல்ல மாற்றமாகவே பார்க்க வேண்டும். ஏனெனில் மாவீரர் தினத்தை ஒரு தேசமாக நினைவேந்துவது முக்கியமானது.

முள்ளிவாய்க்கால் இறுதி நாள்களில் அப்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வன்னியில் இருந்து போரை நிறுத்த குரல் கொடுக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டமையும், அதற்கு பதிலளிக்காமல் தொலைபேசியை அணைத்து விட்டு பம்மிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய தகவல்கள் வெளிவந்திருந்தமையும் இரகசியமல்ல. ஆனால் அவர்கள்தான் இன்று 'உருவேறி' தம்மை தூய செயல் வீரராகக் காட்ட முயல்கின்றனர். அதே போல யுத்தம் நடைபெற்ற வேளை ஒதுங்கியும், பதுங்கியும் இருந்தவர்கள், தமிழ்நாட்டுக்கும், புலம்பெயர் தேசங்களுக்கும் சென்று படித்து மேனிலையடைந்து தமக்கென பாதுகாப்பான வெளியை உருவாக்கியவர்கள் இன்று காகிதப் புலிகளாகவும், முகநூல் புலிகளாகவும் அவதாரம் எடுத்து நிற்கின்றனர்.

உண்மையாக களத்தில் போராடியவர்களும், ஆதரவளித்தவர்களும் ஒதுங்கி நிற்கிறார்கள் அல்லது மௌனமாக இருக்கிறார்கள். அவர்கள் எந்தப் படாடோபமுமின்றி தங்கள் பணிகளைச் செய்கிறார்கள்.

துயிலும் இல்லங்களைத் துப்புரவு செய்தும், நிகழ்வில் உணர்வொன்றக் கலந்து கொண்டும் தமது வரலாற்றுக் கடமையை செய்கிறார்கள். மாவீரர் நாள் என்பது அவர்களாலேயே முன்னெடுக்கப்பட வேண்டும். இரத்தமும் சதையுமான போராட்டத்தின் வாழும் சாட்சிகள் அவர்கள்தான்! ஆயினும் அவர்கள் நிதிப்பின்புலமற்று இருப்பதால், நிதி கிடைக்கும் தரப்பினரின் கையே மேலோங்கியுள்ளது.

'நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்களது தார்மீக ஆதரவைத் தாருங்கள்' என்று ஒரு அசரீரி கேட்கட்டும். இந்த தூய அரசியல்வாதிகளும், காகிதப் புலிகளும், முகநூல் புலிகளும் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓடி விடுவார்கள்' என்றார் நண்பரொருவர். உண்மைதான்! செயல்வீரராக அல்லாமல் படங்காட்டி அரசியல் முதலீட்டை அடைய நினைக்கும் எல்லோரையும் இத்தகைய அறிவிப்பு ஓடி ஒதுங்க வைக்கும். அதுவரை இவர்கள் காட்டில்தான் மழை!

இன்றளவும் அனேகமான அரசியல்வாதிகளும் மாவீரர் நாள் நிகழ்வுகளில் பங்குபற்றியிருக்கிறார்கள். ஆனால் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் நகுலேஸ் மட்டும் மாவீரர் பெற்றோர்களுக்கு உலர் உணவு வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார். இது சிறிய செய்தியாக கடந்து போய் விட்டது. சரவணராஜாவின் பதவி விலகலுக்கு பொங்கியெழுந்த எவரும் இதற்கு எதிராக வாய் திறக்கவில்லை. போராளிகளுக்கு எங்கள் தலைவர்கள் தரும் மதிப்பு இதுதான்!

எவ்வாறாயினும் கெடுபிடிகளுக்கு மத்தியில் மக்கள் தேசமாகத் திரண்டு மாவீரர்களின் நினைவேந்தியிருப்பது முக்கியமானது. அது வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பெருமுயற்சி. இதனோடு சேர்த்து களமாடி விழுப்புண் பட்டும், தம் எதிர்காலத்தைத் தொலைத்தும் நிற்கும் முன்னாள் போராளிகளை அமைப்பாகப் பலப்படுத்தினாலே இயல்பாக அவர்கள் தம் தோழர்களை நினைவில் கொள்ளும் வேலைத்திட்டங்களை கனதியாக முன்னெடுப்பர். அது ஒரு கட்டமைப்பாக காலமுழுதும் நிலைபெறும். புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்கள் அரசியல்வாதிகளை விடுத்து, போராளிகள் ஊடாக இதனைச் செயற்படுத்துவதே காத்திரமான செயற்பாடாக இருக்கும்.



# யாழ் பல்கலை மாணவர்கள்மீது இனவழிப்பின் இரும்புக்கரம்

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் கண்டனம்







யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்மீது இனவழிப்பின் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குமுறை மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ள தமிழ் தேசிய ஆய்வு அமையம், தமிழின விடுதலைக்காக நியாயமான முறையிலும் ஜனநாயக வழியிலும் மாணவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களை ஒடுக்க ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது. யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்மீதான கைது மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபி மீதான சிங்களத்தின் குறிவைப்பு தொடர்பில் தமிழ் தேசிய ஆய்வு அமையம், வெளியிட்டுள்ள விரிவான அறிக்கை வருமாறு:

### சிங்களத்தின் ஆக்கிரமிப்பு அட்டூழியம்

“மயிலத்தமடுவில் பாரம்பரியமாக பண்ணை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் அப் பிரதேசத்தில் பாரிய ஆக்கிரமிப்பு முயற்சிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், இச் செயற்பாடு தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஆற்றாமையையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. ட்டக்களப்பு செங்கலடி மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையில் உள்ள மேய்ச்சல் தரைப் பிரதேசமான மயிலத்தமடுவில் மக்களுக்கு மாத்திரமின்றி கால்நடைகளுக்கும் சிங்களப் பேரினவாதிகள் பாரிய அச்சுறுத்தல்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துவரும் நிலையில், தமிழ் மக்களின் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் ஆக்கிரமிக்கும் முயற்சியில் சிங்களப் பேரினவாத அரசும் அதன் இராணுவமும் தொல்லியல் திணைக்களமும் பேரினவாத காடையர்களும் ஈடுபடுகின்றனர். இதனால் தமிழர் தாயகமே போர்க்கோலத்தில் உள்ளது. சிங்களத்தின் ஆக்கிரமிப்பு அட்டூழியத்தினால் தமிழர் தேசமே பெரும் அபாயத்தில் உள்ளது. இந்த நிலையில் குறித்த ஆக்கிரமிப்புக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

### மாணவர்களை சிறையிலடைத்தமை மனித உரிமை மீறல்

மயிலத்தமடு மக்களின் நில உரிமைக்கான போராட்டத்திற்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் தமது தார்மீக ஆதரவை வழங்கிய நிலையில், யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் அப் போராட்டத்திற்கு ஆதரவை வழங்கும் விதமாக மட்டக்களப்பு சென்றிருந்தனர். இந்த நிலையில் போராட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு திரும்பிய நிலையில் மட்டக்களப்பு சந்திவெளிப் பொலிசாரால் மாணவர்கள் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அறுபது பேர் அடங்கிய மாணவர் குழுவில் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய மாணவத் தலைவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை அதிரச்சி தரும் செய்தியாக வெளியானது.

ஜனநாயக வழியில் போராட்டத்தில் ஈடுபடச் சென்றவர்கள் மாணவர்கள். அகிம்சை வழியில் மிகவும் நியாயமான முறையில் போராடச்சென்ற மாணவர்களின் கைகளில் விலங்கு மாட்டி அவர்களை சிறையில் அடைத்த ஜனநாயக மீறல் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டுள்ளது. இதேவேளை மாணவர்களை விடுவிக்கும் வகையில் மக்களும் சட்டத்தரணிகளும் அங்கு ஒன்றுகூடிய போதும் கூட, மாணவர்களுக்கு நீதி மன்றம் பிணை வழங்கிய பின்னரும் கூட இருப்பத்து நான்கு மணிநேரம் கடந்தும் மாணவர்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். மாணவர்களை இவ்வாறு சிறையில் அடைத்து அச்சுறுத்தியமை பாரிய மனித உரிமை மீறலின்பாற்பட்டது என்பதை கடும் கண்டனத்துடன் சுட்டிக்காட்டுகிறோம்.

### வடக்கு கிழக்கு இணைவதை தடுக்கவே

வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் ஆகும். வடக்கிற்காக கிழக்கும் கிழக்கிற்காக வடக்கும் குரல் கொடுத்து நாம் அனைவரும் ஒன்றுபட்ட தாயக மக்கள் என்பதை எடுத்துரைக்கும் வகையில் ஈழ விடுதலைப் போராட்டம் ஈழ மண்ணில் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் கடந்த காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் இவ்வாறு இணைந்து வடக்கு கிழக்கு விடுதலைக்காக செயற்பட்டு வருகிறார்கள். இந்த நிலையில் வடக்கு கிழக்கு மாணவர்கள் இணைந்து போராடுவதை தடுக்கவே இவ்வாறு கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது என்பதையே நாம் சுட்டிக்காட்டுகின்றோம்.

இதேவேளை வடக்கு கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்கள் தமது மக்களின் பிரச்சினைகளுக்காகவும் தமது விடுதலைக்காகவும் குரல் கொடுத்து வருவதுடன், ஈழ விடுதலைப் போராளிகளின் நியாயங்களை தமது குரலிலும் எடுத்துரைத்து வருகின்றனர். போராட்ட காலத்தில் இனவிடுதலைச் செயற்பாடுகளுக்காக பல்கலைக்கழக மாணவத் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் துணைவேந்தர் ஒருவர் காணமல் ஆக்கப்பட்ட சம்பவமும் நிகழ்த்தப்பட்டது. அத்துடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் ஸ்ரீலங்கா அரசின் மரண எச்சரிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டதுடன் நாட்டை விட்டு ஓடிய சம்பவங்களும் உள்ளன.

### நினைவேந்தல் தூபிமீது குறி

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவேந்தல் தூபியையும் ஸ்ரீலங்கா அரசு இலக்கு வைத்துள்ளது. குறித்த நினைவுத் தூபி அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா அரச உயர் மட்டத் தரப்பிற்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக நிதி கையாளுகை மற்றும் அனுமதிகள் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளைத் துவங்கியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளமையும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள்மீதும் யாழ் பல்கலைக்கழக சமூகம்மீதும் இரும்புக்கரம் கொண்டு இனவழிப்பு செய்யும் மற்றொரு செயற்பாடாகவே அமைந்துள்ளது.

இனவழிப்புப் போரினால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தை சேர்ந்த மாணவர்கள் தமது துயரங்களை வெளிப்படுத்தவும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தவும் ஆற்றுப்படுத்தவும் இத்தகைய நினைவுத் தூபியை அமைப்பது என்பது அவர்களின் பண்பாட்டு உரிமையாகும். முள்ளிவாய்க்காலில் சொந்த உறவுகளையும் இனத்தையும் பறிகொடுத்த சமூகத்தின் பல்கலைக்கழகத்தில் இவ்வாறு நினைவேந்தல் தூபியை அமைப்பது என்பது அவர்களின் வழிபாடு மற்றும் நினைவேந்தல் உரிமையாகும். அதனை தடுக்கவோ, கேள்விக்கு உட்படுத்தவோ எந்தவொரு தரப்பிற்கும் அனுமதி வழங்க முடியாது.

### தொடரும் இனவழிப்பு

2009 முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரும் ஈழத் தமிழ் மக்கள்மீதான இனவழிப்பு தொடர்கிறது என்பதற்கு மேற் சொல்லப்பட்ட இரண்டு நிகழ்வுகளும் தக்க சான்றாதாரங்கள் ஆகின்றன. ஈழத் தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு அவர்களின் நினைவுகள் மீதும் போர் தொடுப்பதில் சிங்கள தேசம் மிகவும் குறியாக இருக்கிறது. அத்துடன் கடுமையான பொருளாதார நெருக்கடியின் போதும், விலைவாசி ஏற்றங்களின் மத்தியிலும்கூட ஈழத் தமிழ் மக்களை ஒடுக்கி அழிப்பதில் ஸ்ரீலங்கா அரசும் சிங்கள தேசமும் கொண்டுள்ள வெறி இந்த உலகிற்கு பல்வேறு செய்திகளை சொல்லுகின்றது. பன்னாட்டு சமூகம் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.


இதேவேளை ஈழத்தில் தொடர்ந்தும் சிங்கள அரசின் கீழ் தமிழ் மக்கள் வாழ முடியாத நிலை காணப்படுகின்றது. ஸ்ரீலங்கா அரசு இழைத்த இனப்படுகொலைக் குற்றங்களுக்கு தண்டனை வழங்கி, தண்டிக்காமல் விட்டால் சிங்கள அரசு இனவழிப்பை இப்படியே தீவிரப்படுத்தி, ஈழத் தமிழ் மக்களை அழித்து ஒழிக்க முயலும். எனவே பன்னாட்டு சமூகம் விரைந்து இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

ஈழத் தமிழ் மக்கள் தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கும் பொதுசன வாக்கெடுப்பிற்கு உலகம் முன்வர வேண்டும் என்பதை தமிழ் தேசிய ஆய்வு அமையம் வலியுறுத்தி நிற்கிறது...” என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மாவீரர் நாள்



































# தமிழர் தாயகம் உட்பட உலகெங்கும் மாவீரர்களுக்கு அஞ்சலி

தமிழர் தாயகம் உட்பட உலகில் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் இன்று மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கையின் வடக்கு கிழக்கில் இம்முறை மாவீர் துயிலுமில்லங்கள் பிரமாண்டமாக அலங்கரிக்கப்பட்டு பெருந்திரளான மக்கள் ஒன்று திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

அந்தவகையில் ஈழதேசத்தின் யாழ்மாவட்டத்தில் கோப்பாய், வடமராட்சி, கொடிகாமம், உடுத்துறை தீவகம் சாட்டி, மாவீரர் துயிலும் இல்லங்களிலும் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடம் வல்வெட்டித்துறை தீருவில் திடல் மற்றும் யாழ்.பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் விசுவமடு, முழங்காவில்,

மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி, பண்டிவிரிச்சான்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு, முள்ளியவளை, அலம்பில், ஆலங்குளம், வன்னிவிளாங்குளம், தேராவில், பச்சைப் புல்மோட்டை

வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம்

அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிக்குடியாறு,

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடிமுன்மாரி, தரவை, வாகரை கண்டலடி ஆகிய மாவீர துயிலும் இல்லங்களிலும் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதேவேளை, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், சுவிஸ், கனடா, அமெரிக்கா, நியூஸிலாந்து உட்பட தமிழர் வாழும் புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.


















# ஓ! மாவீரர்களே!

'சாவு என்னை எதிர்பார்த்திருக்கிறது
என்றான்' கோழை
'சாவை நான் எதிர்பார்த்திருக்கிறேன்
என்றான்' வீரன்

ஓ! மாவீரர்களே !
நீங்கள் இரண்டாவது வகை

'மிதிபட்டுச் சாகிறேன்'
புலம்பினான் கோழை
'போராடிச் சாகிறேன்'
உறுமினான் வீரன்

ஓ! மாவீரர்களே !
நீங்கள் இரண்டாவது வகை

'காலம் தமிழீழத்தை
உருவாக்கும்'
காத்திருந்தான் கோழை
'காலத்தை நான் உருவாக்குவேன்'
குளமாடினான் வீரர்

ஓ! மாவீரர்களே !
நீங்கள் இரண்டாவது வகை

'உயிர்வாழ விரும்புகிறேன்'
முனகினான் கோழை
'மானத்தோடு உயிர்வாழ
விரும்புகிறேன்'
முழங்கினான் வீரன்

ஓ! மாவீரர்களே!
நீங்கள் இரண்டாவது வகை

ஓ! மாவீரர்களே!
இதுதான் உண்மை

உங்கள் உயிரின்
வலிமை அறிந்து எதிரி
உங்களை அழித்தான்

ஆனால் அவன்
ஏமாந்து போனான் ஏனென்றால்

உங்கள் உயிரிலும்
வலிமை மிக்கது
உங்கள் சாவு

**காசி ஆனந்தன்**




# ஒரு நாள் விடியல் வரும்...

மாவீரரே!!
தமிழ் மானம் காத்திட
உயிர் கொடுத்த மாவீரரே!?
தாய் மடி துறந்து
மண் மடி சுமந்த மறவர்களே!
கார்த்திகை மாதம்
காந்தள் மலர் உங்கள்
கரம் பட மலர்ந்ததுவோ?
கல்லறை மேனிகள்
கண் திறந்து காத்திருந்தனவோ?
சந்தனப்பேழையில் நீங்கள்,
சாந்தமாக சரித்திரம் ஆனிர்களே?

பல களம் கண்ட
விலை மதிக்க முடியாத
விசித்திரமான இரத்தினங்களே?
கரிகாலன் சேனை உங்களை,
கையோடு அரவணைக்க,
காவியமாகிப்போன
கண் மடல்களே!!

கார்த்திகை 27 எங்கள்,
தேசத்தின் கண்ணீர் குரல்கள் ஒலிக்கும் நாள்.
வீரத்தின் முத்துக்களே!!
தேசத்துக்காக பாசத்தை மறந்து
எதிரியை எதிர்த்து நிற்க
துணிந்த உத்தமர்களே!!
கார்த்திகை மாதம்
தமிழர் மனதில்
கனமான மாதமாகி,
கண்ணீர் சிந்துகின்றதே!!
தீப ஒளி கையில் ஏந்தி,
உங்களின் கல்லறை தொட்டு கை
கூப்பி வணங்குகின்றதே!

உங்களை எந்நாளும்
மறவோம்.
ஒரு நாள் விடியல் வரும்
அந்நாள் வரை காத்திருப்போம்.

**மருதமண்**



# தேசம் துளிர்க்கட்டும்

குத்துவிளக்குகளே
குலதெய்வங்களே
உங்கள் சொந்தங்கள்
வந்துள்ளோம்

வண்ணக் கனவுகள்
பல கண்டிருப்பீர்
மன ஏக்கங்கள்
கொண்டிருப்பீர்
துயரங்கள் பல
கடந்திருப்பீர்
அத்தனை
சுமைகளையும்
ஏன் சுமந்தீர்
தாய்நிலம்
விடுதலை அடைய
வேண்டுமென்றே


நாம்
கண்ட கனவுகளை
உமதாக்கி வாழ்ந்தீரே
உமக்கு நன்றி சொல்ல
கல்லறையில்
இரு கரம் கூப்பி
வணங்குகிறோம்

நெய்விளக்கேற்றி
பூத்தூவி கண்ணீரால்
கல்லறையை
நனைக்க வந்தோம்
வானம் திறந்து
மழை பொழியும்
எங்கள்
வாசலெங்கும்
பூ மலரும்
ஆனந்தக் களிப்பில்
தேசம் துளிர்க்கட்டும்

**இன்பறாஜ்**

# ரணிலின் ஆட்சியிலும் ஓங்கிய சீனாவின் கை





**தந்திரீகன்**

சிறிலங்காவை மையப்படுத்திய சீனாவின் விரிவாக்க நடவடிக்கைகள் மிகத்தீவிரமன நிலையை அடைந்துள்ளது. விசேடமாக, சீனாவின் பிடிக்குள்ளேயே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் வந்துவிட்டது என்ற நிலைமைகளே நீடிக்கின்றன.

விசேடமாக, ஒரே மண்டலம், பாதை முன்முயற்சியின் மூன்றாவது மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றமையும், அதற்கு சொற்ப நாட்களுக்கு முன்னதாக சிறிலங்காவின் கடன் மறுசீரமைப்புக்கு சீனாவின் எக்ஸிம் வங்கி பச்சைக்கொடி காட்டியமையும் அதனை மிகத்தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

அதுமட்டுமன்றி, சீனாவின் செய்மதி மற்றும் ஏவுகணை வழித்தட கண்காணிப்புக் கப்பலான யுவான் வாங்5 சிறிலங்கா கடற்பரப்புக்குள் பிரவேசித்தமையால் இந்தியா மிகக் கடுமையான அதிருப்தியை வெளியிட்டது.

அந்த அதிருப்தியானது, தமது நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கை சிறிலங்கா விஜயத்தை இரத்துச் செய்யுமளவிற்கு தீவிரமான தீர்மானம் எடுப்பதற்கு வித்திட்டிருந்தது.

அதனையடுத்து, சிறிலங்காவிற்குள் கடந்த ஒக்டோபர் 25ஆம் திகதி சீனாவின் ஷியான் யாங்06 கப்பல் மீண்டும் நாட்டிற்கு வருகை தருவது குறித்து அமைச்சுக்கு அறிவிக்கப்படாத போதும் அக்கப்பல் நேற்று இந்து சமுத்திரத்தில் என்ற ஆய்வுக்கப்பல் வருவதாக அறிவிக்கப்பட்டது. இந்த அறிவித்தல் வந்த நாள் முதல் பல்வேறு இராஜதந்திர நகர்வுகளை அமெரிக்கா,இந்தியா உள்ளிட்ட நாடுகள் மேற்கொண்டன.

குறிப்பாக இந்தக் கப்பலில் பிரவேசித்து ஆய்வுகளைச் செய்வதற்கு தயாராக இருந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் பதவிகளைத் துறந்திருந்தனர்.

கடற்படை ஆரம்பத்தில் ஆராய்ந்து வழங்கிய அறிக்கைக்கு அமைவாக பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்ததாக கூறினாலும் பின்னர் வெளிவிவகார அமைச்சே தீர்மானம் எடுக்கும் என்று ‘பல்டி’ அடித்துக்கொண்டது.

அத்தோடு நின்றுவிடாது, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சீனாவின் கப்பலுக்கான அனுமதி பரிசீலனையில் இருப்பதாக கூறியதோடு நவம்பருக்குப் பின்னர் தான் சீனாவின் கப்பலை வருவிப்பதற்கான அனுமதி வழங்கப்படும் என்றும் சுட்டிக்காண்பித்தார்.

யார் என்ன கூறினாலும், சீனாவின் ஷியான் யாங்06 கப்பல் மீண்டும் நாட்டிற்கு வருகை தருவது குறித்து அமைச்சுக்கு அறிவிக்கப்படாத போதும் அக்கப்பல் நேற்று இந்து சமுத்திரத்தில் திட்டமிட்டவாறு ஒக்டோபர் 25ஆம் திகதி கொழும்புத்துறைமுகத்திற்குள் பிரவேசித்தது. அதுமட்டுமன்றி சாதாரண பிரஜைகளைக் கூட கப்பலுக்குள் அழைத்துக் காட்சிப் படுத்தும் அளவிற்கு சீனா கீழிறங்கி செயற்பட்டிருந்தது.

ஷியான்06 கப்பல் விடயத்தில் சீனா தான் ஏலவே தயாரித்த எந்தவொரு நிகழ்ச்சி நிரலையும் மாற்றவில்லை. அதுமட்டுமன்றி மேலதிகமாக 48மணி நேரம் வடக்கில் தங்கியிருப்பதற்கு அனுமதியைக் கோரி அதனையும் பெற்று குறித்த காலப்பகுதியில் சிறிலங்கா கடற்பரப்பினை சுற்றியடித்து விட்டுச் சென்றிருக்கின்றது.

ஆனாலும் அக்கப்பல் இன்னமும் இந்து சமுத்திரத்தினை விட்டு வெளியேறவில்லை. தற்போதும் கூட ஷியான் யாங்06 கப்பல் மீண்டும் நாட்டிற்கு வருகை குறித்து அமைச்சுக்கு அறிவிக்கப்படாத போதும் அக்கப்பல் இந்து சமுத்திரத்திலேயே தங்கியிருக்கின்றது.

இராஜதந்திர மட்டத்தில் மேற்படி கப்பல் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் சீனா எதிர்வரும் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி முதல் பெப்ரவரி 20ஆம் திகதி வரை ஷியான் யாங் ஹொங் 03 கப்பலை ஆய்வு செய்வதற்காக கூறி சிறிலங்காவுக்கு அனுப்பவதற்கு தயாராகியுள்ளது.

இப்போது இந்த விடயம் பேசுபொருளாகியுள்ளபோதும், சிறிலங்கா அரசாங்கம் குறித்த கப்பல் விடயம் சம்பந்தமாக மௌனம் கலைப்பதற்கு தயாராக இல்லை என்பது உறுதியான விடயமாகின்றது.

இவ்வாறிருக்கையில், மலையக மக்கள் சிறிலங்காவுக்கு வருகை தந்து 200ஆண்டுகளாகின்ற நிலையில் அதனை அனுஸ்டிக்கும் முகமாக பெருமெடுப்பில் நடைபெற்ற ‘நாம் 200’ நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பங்கேற்றதோடு, திருமலைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்திருந்தார்.

அவருடைய வருகையின் போது, வெறுமனே வாக்குறுதிகள் தாள் அள்ளி வழங்கப்பட்டிருக்கின்றன. அதேநேரம் இந்தியா தமிழர்களை கைவிடாது என்ற வழக்கமான உத்தரவாதமும் அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அவருடைய விஜயம் நிறைவுக்கு வந்து மூன்றே நாட்களில் வடக்கிற்கான விஜயமொன்றை மேற்கொண்டார் சிறிலங்காவுக்கான சீனத்தூதுவர் ஷீ சென் ஹொங்.

இவர் வடக்கிற்கான விஜயத்தை மேற்கொள்ளும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாக இருப்பதோடு இம்முறை அவர் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், தீவகம், மன்னார் என்று அனைத்துப் பகுதிகளுக்கும் நேரடியாக விஜயம் செய்துவிட்டுச் சென்றுள்ளார்.

அத்துடன், முதற்கட்டமாக வறுமையில் உள்ள பொதுமக்களுக்காக ஐயாயிரம் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை தானே நேரடியாக சென்று வழங்கும் செயற்பாட்டையும் முன்னெடுத்துள்ளார். ஏறக்குறைய வடக்கு மக்களின் வாசல் வரையில் அவர் வந்து சென்றிருக்கின்றார்.

அத்தோடு எதிர்காலத்தில் இன்னும் உதவிகள் வழங்கப்படும், உணவுப் பொதிகள் மாத்திரமன்றி, மீனவர்கள், விவசாயிகளுக்கான உதவிகளும், வீட்டுத் திட்டமும் வழங்கப்படும் என்ற தகவலையும் சீனத் தூதுவர் வெளியிட்டிருக்கிறார்.

அதுமட்டுமன்றி, சிவில் அமைப்பினர், தொழில்முனைவோர், ஊடகர்கள் என்று தெரிவு செய்யப்பட்ட தரப்பினரை மட்டும் சந்தித்து விட்டுச் சென்றுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களில் மனித உரிமைகள் விவாகரம், அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக சிவில் தரப்பினர் உள்ளிட்டவர்கள் சீனாவின் நிலைப்பாடுகள் தொடர்பில் கேள்விகளை தொடுத்தபோது, ‘அது சிறிலங்காவின் உள்ளக விவகாரம்’ என்று தடாலடியாக கூறி வாயடைக்கச் செய்துவிட்டார் சீனத்தூதுவர் ஷீ சென் ஹொங்.

அதுமட்டுமன்றி, பௌத்த சமயத்துக்கான உதவிகளை வழங்குதல், மற்றும் சிங்கள மக்களுக்கு உதவிகளை அளித்தல் சம்பந்தமாகவும் பாரட்பட்சமான நிலைமைகளை சுட்டிக்காட்டிய போது, அவர் அதனை முழுமையாக மறுதலித்து தமது நாட்டின் பொதுவுடைமைக்கொள்கைக்கு அமைவாகவே செயற்படுவதாகவும், சிறிலங்கா அரசாங்கத்துடன் காணப்படும் இருதரப்பு கொள்கை காரணமாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், சர்வதேச தளங்களிலும் ஆதரவாக செயற்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைவிடவும், அவர் வடக்கில் சில முக்கியமான கேந்திர இடங்களுக்குச் சென்றுள்ளமையும் அங்கு தெரிவித்த கருத்துக்கள் மற்றும் அவதானித்த விடயங்கள் இராஜதந்திர ரீதியிலும், பூகோள ரீதியிலும் மிகவும் முக்கியமானவையான விடயமாக உள்ளது.

சீனத் தூதுவர் நயினாதீவுக்கு சென்றிருக்கிறார். நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய இடங்களில் சீனா கலப்பு மின் திட்டங்களை அமைக்கும் உடன்பாட்டில் கையெழுத்திட்டிருந்தது. இந்தியாவின் எதிர்ப்புகளை அடுத்து அந்த திட்டத்தை அரசாங்கம் இரத்துச் செய்தது.

எனினும், கலப்பு மின் திட்டத்தை இந்தியா இன்னமும் நடைமுறைப்படுத்தாத நிலையில் சீனத் தூதுவர் 7,500 ரூபா பெறுமதியான உதவிப் பொதிகளின் மூலம் அங்குள்ள மக்களின் வீடுகளுக்குள் நுழைந்திருக்கிறார். அங்கு அவர் மக்களைச் சந்தித்துவிட்டு குறித்த திட்டம் ஆரம்பிக்கப்படவிருந்த பகுதிகளையும் பார்வையிட்டுள்ளார்.

அத்தோடு, கடந்தமுறை சீனத் தூதுவர் சக்கோட்டையில் நின்று இந்தியா எவ்வளவு தூரம் என்று கேள்வி எழுப்பியமை, பரவலான கவனத்தைப் பெற்றது. அதேஇடத்தை இம்முறையும் அவர் தவறவிடவில்லை.

அதனைத் தொடர்ந்து அவர் மன்னாருக்குச் சென்றுள்ளார். மன்னாரின் மூன்றாம் திட்டுவரையில் பயணித்தவர், இந்திய கடல் எல்லையை பார்வையிட்டுள்ளார். இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பிலும் கேட்டறிந்துள்ளார்.

இத்தோடு, இவரது விஜயம் நிறைவுக்கு வரவும், சீன ஜனாதிபதி ஷிஜிங் பிங்கின் சிறப்பு தூதுவரும் மாநிலங்களவை உறுப்பினருமான ஷெஹின் ஜிகியூன் மூன்று நாள் விஜயமொன்றை சிறிலங்காவுக்கு மேற்கொண்டுள்ளார்.

அவர், மாலைத்தீவிற்கு விஜயம் செய்து புதிய ஜனாதிபதி மொஹ மட் முய்சுவின் பதவியேற்பு விழா வில் பங்கேற்ற கையோடு சிறிலங்கா வுக்கு வந்திறங்கியுள்ளார். இக்காலப்பகுதியில் அவர், அம்பாந் தோட்டையில் முன்னெடுக் கப்படவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு திட்டம் உட்பட முக்கிய முதலீடுகள் தொடர்பில் பார்வையிட்டுள்ளார்.

அதனையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்டவர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, மிக முக்கியமாக ஒரே மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சி என்ற சீனாவின் கனவுத்திட்டமான பட்டுப்பாதையின் புதிய வடிவதத்தின் இரண்டாவது செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்புக்கான சிறிலங்காவின் உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

ஆக, சிறிலங்காவின் கடன் மறுசீரமைப்புக்கு பச்சைக்கொடியைக் காண்பித்துள்ள சீனா மறுபக்கத்தில் தன்னுடைய கனவை நிறைவேற்றவும், இந்து மா சமுத்திரத்தில் மேலும் ஆழமாக காலூன்றி விரிவாக்கும் செய்வதற்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கரைசேருமா சிறிலங்கா

## 'வரவு செலவுத்திட்டம்-2024 மீதான பார்வை'

**தேசிகன்**





சிறிலங்காவின் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டமானது 'புரட்சிகரமானவரவு, செலவுத் திட்டம்” என்ற தொனிப்பொருளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கடந்த 13ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.

வரவு,செலவுத்திட்டத்தில் 4,127 பில்லியன் ரூபா வருமானமாகவும், 6,978பில்லியன் ரூபா செலவீனமாகவும் காண்பிக்கப்பட்டுள்ளதோடு 2,851 பில்லியன் ரூபா துண்டுவிழும் தொகையாக உள்ளது.

வரவு, செலவுத்திட்டத்தில் காணப்படும் துண்டுவிழும்; தொகையை ஈடு செய்வதற்கான எந்தவொரு உபாயங்களும் காணப்படவில்லை. அதனால் குறித்த தொகையை ஈடுசெய்வதாக இருந்தால் மேலதிகமாக கடன்களைப் பெற வேண்டிய நிலைமைகள் தான் ஏற்படும். இது நாட்டின் அடுத்த பரம்பரையினரையும் கடனாளிகளாக்கும் செயற்பாடாகும்.

சிறிலங்காவைப் பொருளாதாரத்தில் மீட்பதற்கான வரவு, செலவுத் திட்டம் என்று கூறினாலும் உண்மையில், நாட்டின் எதிர்கால சந்ததியினரை கடனுக்குள் தள்ளி விடுகின்ற நிலைமைகள் தான் அதிகமாக இருக்கின்றன.

அதேநேரம், துண்டுவிழும் தொகையை ஈடு செய்வதற்காக மேலதிகமாக கடன்களை பெறுவதற்கு அப்பால் நாட்டின் வளங்கள் முதலீடுகள் என்ற பெயரால் சிறிலங்காவை மையப்படுத்தி போட்டிபோடும் நாடுகளுக்கு வழங்கப்படுவதற்கும் சாத்தியங்கள் உள்ளன. இதனால் இந்து சமுத்திர கேந்திர நாடாக இருக்கும் சிறிலங்காவில் பூகோளப் போட்டியாளர்கள் இடையே மேலும் ஏட்டிக்குப் போட்டியான நிலைமைகள் கூர்ப்படைந்து உள்நாட்டில் பதற்றமான சூழல்கள் தீவிரமடையப்போகின்றன.

இவ்வாறான நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீடமைப்புக்காக 200கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது வரவேற்கக் கூடிய விடயமாக இருந்தாலும், கடந்த காலத்திலும் இவ்வாறான கவர்ச்சியான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. ஆனால் நடைமுறையில் வீடமைப்புத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

குறிப்பாக, வடக்கில் கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு வடக்கு மாகாணத்திற்கு மட்டும் 7512.814 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது. எனவே இந்நிதியினை படிப்படியாக விடுவித்து மக்களை நெருக்கடிக்குள் இருந்து மீட்க வேண்டும்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்திற்கு 1189.330 மில்லியனும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 1912.747 மில்லியனும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 1592.27 மில்லியனும், மன்னார் மாவட்டத்திற்கு 1573.348 மில்லியனும், வவுனியா மாவட்டத்திற்கு 1245.362 மில்லியனும் தேவைப்படுகின்றது. அதுதொடர்பில் எவ்விதமான கவனங்களும் செலுத்தப்படவில்லை.

இவ்வாறு இருக்கத்தக்கதாக புதிததாக வடக்கு மக்களின் வீடமைப்பு தேவையை மையப்படுத்தி வீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று கூறுவதானது, அந்த மக்களை தன்பக்கம் ஈர்த்துக்கொள்வதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒருவகையான தேர்தல் உத்தியாகவே இருக்கின்றது.

யாழிலும், அம்பாந்தோட்டையிலும் முதலீட்டு வலயங்கள் அமைப்பதற்கான முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாணம் உட்பட வடமாகாணத்தில் ஏலவே செயற்பட்டு வந்த கைத்தொழில் கட்டமைப்புக்களை மீளச் செயற்படுவதற்கான கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றபோதும் அதுதொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

விசேடமாகக் கூறுவதாக இருந்தால் பரந்தன் இரசாயத் தொழிற்சாலை, ஆணையிறவு உப்பளம், ஒட்டுசுட்டான் மட்பாட்டத்தொழிற்சாலை, அச்சுவேலி கைத்தொழில் பேட்டை என்பன மீட்டும் செயற்படுத்த வேண்டிய கட்டாயத்தில் காணப்படுகின்றன. இவற்றுக்கான நிர்வாகக் கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன. அவை கொழும்பில் இருந்து செயற்படுகின்றன. ஆனால் தொழில்துறை மட்டுமே இயக்கத்தில் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. ஆகவே தொழில்துறையை மட்டும் மீளமைப்பது என்பது கடினமானதொரு விடயமல்ல.

வடக்கின் குடிப்பரம்பலை மாற்றியமைக்க வேண்டும் என்ற நீண்டகால நிகழ்ச்சி திட்டத்தினைக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசு, தொழில்துறைகளை ஸ்தாபிப்பதன் ஊடாக அவ்விதமான முயற்சிகளை மீண்டும் ஒருதடவை முன்னெடுக்காது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதங்களும் இல்லை. விசேடமாக ரணில் விக்கிரமசிங்க அவ்விதமான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார் என்று கூறுவதற்கும் இல்லை.

வடக்கு, கடற்றொழிலாளர்களின் ஊக்குவிப்புக்காக 500மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த ஒதுக்கீடானது, புதிதாக கொண்டுவரப்படவுள்ள கடற்றொழிலாளர்கள் சட்டம் குறித்து கடுமையான எதிர்மறை நிலைப்பாடுகளை கொண்டுள்ள வட, மாகாண கடற்றொழிலாளர்களைத் திருப்திப்படுத்துவதற்கானதொரு உத்தியாகவே இருக்கின்றது.

ஏனென்றால், வடக்கு கடற்றொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அண்மைய நாட்களில் புதிய கடற்றொழிலாளர்கள் சட்டம் சம்பந்தமாக தீவிரமான கரிசனைகளை செலுத்திவருகின்றார்கள்;. துறைசார்ந்த நிபுணர்களிடத்திலும் அதுபற்றி ஆய்வுகளைச் செய்துள்ளனர். இதன் ஏலவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழிலாளர் சங்கங்களின் நிர்வாகங்களை தமக்குச் சாதகமானவர்களை அமர்த்தும் வகையில் மாற்றியமைக்கும் செயற்பாட்டில் இறங்கியுள்ளார்.

அதேநேரம், வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குவதற்கு முன்னதாக, தென்னிலங்கை மற்றும், ஏனைய மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்தி சுமூகமான முறையில் கடற்றொழிலை புரிவதற்கு இடமளித்தாலே வடக்கு மீனவர்கள் தமது வாழ்வாதரத்தினை சுபீட்சமாக ஈட்டிக்கொள்வார்கள். விசேடமாக, கடலட்டைப் பண்ணைகளால், மரபுமுறை கடற்றொழிலாளர்களும், சுருக்குவலை கடற்றொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் விடயங்கள் எவையுமே கவனத்தில் கொள்ளப்படவில்லை. செவிடன் காதில் ஊதிய சங்குபோன்றே உள்ளது.

அடுத்து தமிழ் மக்களின் குடிநீர் விடயத்தில் தீவிரமான கரிசனை இருப்பதாக பாலியாறு திட்டம் முன்வைக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த திட்டமானது, 2 ஆயிரத்து 100 மில்லியன் ரூபாவிலும், பாலியாறுத் திட்டம் 9 ஆயிரம் மில்லியன் ரூபாவிலும் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக 2018ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தின் மீள்குடியேற்றச் செயலணிக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது வரையில் அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாத நிலையில் தான் மீண்டும், பாலியாறு திட்டம் முன்னெடுக்கப்படும் என்ற விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்து தமிழ் மக்களின் உணர்வுகளுடன் விளையாடும் விடயம் மீண்டும் அரங்குக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் உள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான இழப்பீட்டை வழங்குவதற்காக ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உண்மையில் வடக்கு, கிழக்கில் தமது அன்புக்குரியவர்களை தொலைத்துவிட்டு இது கால வரையிலும் போராடிக்கொண்டிருப்பவர்கள் இழப்பீட்டுத்தொகையை மட்டும் எதிர்பார்க்கவில்லை.

அவர்கள் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளவும், அதற்கு காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்துவதையுமே இலக்காக கொண்டுள்ளனர். இதற்காகவே அவர்கள் இத்தனை காலமும் வீதிகளில் போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

அவ்வாறான நிலையில், நிலைமாறுகால நீதிப்பொறிமுறையின் அடிப்படைகள் மீறப்படும் வகையில் ஆயிரம் மில்லியன்கள் ஒதுக்கப்பட்டு நேரடியாக இழப்பீட்டுத்தொகையை அளித்துவிட்டு நடைபெற்ற விடயங்களை மறந்துவிட வேண்டும், கைவிட்டுவிட வேண்டும். காணாமலாக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழை அல்லது மரணச் சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது.

மேலும், ரணில் விக்கிரமசிங்க, 2015இல் பிரதமராக இருந்தபோதும் கூட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் உணர்வுகளை சீண்டிப்பார்க்கும் வகையில், காணாமலாக்கப்பட்டவர்கள் அனைவரும் உயிரிழந்து விட்டனர் என்று அறிவித்தார். அத்தகையவர் தான் தற்போது, நிதிமூலம் விடயத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிடலாம் என்று முனைகின்றார்.

இதேநேரம், பால் உற்பத்தி சம்பந்தமாகவும், விவசாயத்துறை சம்பந்தமாகவும் விசேட கரிசனைகள் கொள்ளப்பட்டுள்ளதாக வரவு, செலவுத்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக சிறிலங்காவின் பால் உற்பத்தித்துறையை இரட்டிப்பாக்குவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆனால், நாட்டின் பால்உற்பத்தி மற்றும் விவசாயத்துறையுடன் பின்னிப்பிணைந்துள்ள மட்டக்களப்பு, மயித்தமடு, மாதவனை பண்ணையாளர்கள் இரண்டு மாதங்களைக் கடந்து தமது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை மீதான ஆக்கிரமிப்பை போக்குமாறு சித்தாண்டியில் தொடர்ச்சியாக போரடி வருகின்றார்கள்.

இதேநேரம், வடக்கிலும், கிழக்கிலும், தனியார் காணிகளும், அரச காணிகளும், பேமிட் காணிகளும் வன இலகா, வன ஜீவராசிகள், மகாவலி, தொல்பொருளியல், படைகளின் முகாம்கள், வாழ்வாதர நடவக்கைகள் மற்றும் இதர பாரிய முதலீடுகள்

(13 ஆம் பக்கம் பார்க்க)

**(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

என்ற பெயரில் அபகரிக்கப்பட்டு வரும் நிலைமையானது மிகத்தீவிரமடைந்துள்ளது.

இந்த பின்னணியில் தான் காணி உரித்து நிகழ்ச்சித்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளதோடு, இடம்பெயர்ந்துள்ள வடக்கு,கிழக்கு மக்களின் மீள்குடியேற்றத்துக்காக 2ஆயிரம் மில்லியனும், அத்தியாவசிய தேவைகளுக்காக 500மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கிலும், கிழக்கிலும், படைகள் ஆக்கிரமித்து பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இவற்றை விடவும், வன பரிபாலன திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம் ஆகியனவும் தனியாருக்கு சொந்தமான காணிகளை கையகப்படுத்தி வைத்திருக்கின்றன.

அதற்கு மேலதிகமாக மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையும் தனது பங்கிற்கு காணிகளை கையகப்படுத்தியுள்ளது. இந்த கட்டமைப்புக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை மீண்டும் பொதுமக்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் 1985ஆம் ஆண்டுக்கு முன்னதான நிலைமைகள் பின்னபற்றப்பட வேண்டும் என்றும் தமிழ் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் இணக்கப்பாடுகள் எடுக்கப்பட்டு ஓராண்டு கடந்துள்ள போதும் அதனை அமுலாக்குவதற்கு எந்தவொரு துறை சார்ந்த அதிகாரிகளும் முன்வரவில்லை.

இந்த நிலையில், பொதுமக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் காணி உரித்துக்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுவதானது, ஏலவே கூறியது போன்று குடிப்பரம்பலை மாற்றியமைப்பதற்கான மற்றுமொரு உபாயமாக இருக்கலாம் என்ற மிகப்;பெரும் அச்சம் தவிர்க்க முடியாது உருவாகின்றது.

சிறிலங்கா அரசாங்கமானது பாதுகாப்புச் செலவீனங்களுக்காக கடந்த காலத்தொகையான 410பில்லியனிலிருந்து 423பில்லியன்களாக அதிகரித்துள்ளது. போர் முடிந்து 14ஆண்டுகளாகின்றபோதும் பாதுகாப்புச் செலவீனங்களுக்காக தொடர்ச்சியாக நிதி அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் இதற்கான சரியான காரணத்தினை அரசாங்கம் இன்னமும் வெளிப்படுத்தவில்லை. இம்முறை பாதுகாப்புச் செலவீனங்களுக்கு நிதி அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் இருப்பது வேறொன்றும் அல்ல. பதவியைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ரணில் விக்கிரமசிங்கவின் தீவிரமான பற்றுறுதி தான்.

ஏனென்றால், உள்நாட்டில் காணப்படுகின்ற வாழ்வாதார நெருக்கடிகளால் அரகலய2 ஆரம்பிப்பதற்கான நிலைமைகள் காணப்படுகின்றது. அவ்வாறான போராட்ட நிலைமைகள் எழுகின்ற போது, மக்கள் எதிர்ப்பிலிருந்து தமது ஆட்சியைப் பாதுகாத்துக்கொள்வதற்கு பாதுகாப்பு படைகள் விரைந்து செயற்படுத்தப்பட வேண்டி இருக்கின்றன.

அதுமட்டுமன்றி, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதற்கு தயாராகியுள்ள நிலையில் அவரது வெற்றியில் பாதுகாப்பு படைகளின் வகிபாகமும் முக்கியமானது. ஆகவே தான் பாதுகாப்பு படைகளை அவர் 'பார்த்து' கவனிப்பதற்கு திட்டமிட்டுள்ளார்.

ஆனால், பாதுகாப்புத்துறைக்கு அதிகமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ள போதும் கல்வித்துறைக்கு அவ்வாறான அதிகரிப்பைச் செய்யவில்லை. சுகாதாரத்துறைக்கு அதிகரிப்பைச் செய்யவில்லை. மக்களுக்கான நலத்திட்டங்களுக்காக அவ்விதமான அதிகரிப்பைச் செய்யவில்லை.

இதனைவிடவும், 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுலாக்குவதற்கோ அல்லது மாகாண சபைகளுக்கான தேர்தலையோ நடத்துவதற்கு



தயாராக இல்லாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தற்போது மாகாண சபைகளுக்கு பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதற்கான அதிகாரத்தினை வழங்கும் வகையில் முன்மொழிவைச் செய்துள்ளமையானது வேடிக்கையானதாக உள்ளது.

குறிப்பாக, தற்போதே மாகாண சபைகளின் கீழ்; உள்ள பாடசாலைகள் தேசிய பாடசாலைகள் ஆக்கப்பட்டு, அவை மத்திய நிருவாகத்துக்குள் கொண்டுவரப்படுகின்றன. இந்நிலையில் மாகாண சபைகளுக்கு காணப்படுகின்ற கல்வி அதிகாரம் கூட வலது கையால் வழங்கி இடது கையால் பறிக்கப்படுவது போன்று தான் உள்ளது.

இந்த நிலையில் மாகாண சபை நிருவாகங்களின் கீழ் பல்கலைக்கழகங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அவை மாகாண நிருவாகத்துக்குள் தொடர்ச்சியாக பேணப்படுமா என்ற கேள்விக்கு விடைகாண முடியாது. ஆகவே பல்கலைக்கழகங்களை ஸ்தாபிக்கும் முன்மொழிவானது ஒரு சித்துவிளையாட்டாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அரச ஊழியர்களுக்கு 10ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டு அந்தத் தொகை ஏப்ரல் மாதத்திலிருந்து கிடைக்கும் என்ற அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அரச சேவையாளர்களின் கோரிக்கையானது, தாம் வாழ்வாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஆகக்குறைந்தது 20ஆயிரம் ரூபாவை வழங்குமாறு கோரிவருகின்றார்கள். ஆனால் அதில் அரைவாசித் தொகையே அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையானது, ஒட்டுமொத்த அரச சேவையாளர்களின் எதிர்பார்ப்பினையும் சிதைத்துள்ளதாக உள்ளது.

நாட்டில் 70இலட்சம் தனியார் துறையினர் உள்ளனர். அத்துடன் அவர்களும் நாட்டின் பொருளாதார மீட்சியிலும், வளர்ச்சியிலும் காத்திரமான பங்களிப்பைச் செய்கின்றார்கள். ஆனால், அவர்களின் வாழ்வாதார நெருக்கடிகளை பொருட்டாகக் கொண்டு அரச ஊழியர்களைப் போன்று சம்பளத்தை அதிகரிப்பதற்கான எந்தவொரு முன்மொழிவும் செய்யப்படாமையானது ஒட்டுமொத்தமான தனியார் துறையையும் ஏமாற்றுத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

அஸ்வெசும திட்டத்தினை முன்னெடுப்பதற்காக 250மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய நிலையில், அஸ்வெசும திட்டம் வழங்கப்படும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டதில் குழப்பங்கள் நீடிக்கின்றன. முதற்கட்டத்தில் தெரிவு செய்யப்படாதவர்கள் மேன்முறையீடுகளைச் செய்துள்ள நிலையில் அவர்களுக்கு குறித்த திட்டம் கிடைக்குமா இல்லையா என்பது கூற இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

அதேநேரம், அவர்கள் பெற்றுவந்த சமுர்த்திக் கொடுப்பனவும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், நெருக்கடியில் உள்ள மக்கள் சமுர்த்தியையும், இழந்து, அஸ்வெசும திட்டத்தினையும் பெறமுடியாதவர்களாகியுள்ளனர்.

அதுமட்டுமன்றி, முன்மொழியப்பட்டுள்ள வரவு, செலவுத்திட்டத்தில் 15சதவீதமான வரியை 18சதவீதமாக அதிகரிப்பதற்கான நிலைமைகள் உள்ளன. இந்த வரி அதிகரிப்பானது நெருக்கடியில் உள்ள அனைத்து சமூகங்களையும் மேலும் நெருக்கடிகளுக்குள் தள்ளிவிடுவதாகவே உள்ளது. அது மட்டுமன்றி, மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்கும் சூழலையே தோற்றுவிப்பதற்கு வழிவகுப்பதாக உள்ளது.

ஒட்டுமொத்தமாக பார்க்கையில், வடக்கு, கிழக்கினை மையப்படுத்தி பல விடயங்கள் கூறப்பட்டிருந்தாலும், அவை நடைமுறையில் முன்னெடுக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் மிகமிக குறைவாகவே உள்ளன. இதற்கு கடந்த கால முன்மொழிவுகள் சான்றாகின்றன.

அதேபோன்று, சிறிலங்காவின் 2024ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்ட முன்மொழிவுகள் மக்களின் நெருக்கடிகளை கருத்தில் கொள்வதற்கு அப்பால், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தொகையான 330மில்லியன் அமெரிக்க டொலர்களை பெறுவதையே இலக்காக கொண்டுள்ளது என்பது அப்பட்டமாக வெளிப்படுகின்றது.

மறுபக்கத்தில் 2024ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்ட முன்மொழிவுகள் கவர்ச்சிகரமானவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவை அடுத்தாண்டு நடைபெறவுள்ள, ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தியதாகவும், அந்த தேர்தலில் போட்டியிடப்போகின்ற ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெற வைப்பதற்குமான பிரசார உத்தியாகவும் காணப்படுகின்றது.

இதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வரவு,செலவுத்திட்ட உரையின்போது, குறிப்பிட்டவற்றில் இரண்டு விடயங்கள் முக்கியமானவையாகின்றன.

குறிப்பாக, அவருடைய உரையானது, புத்தரின் போதனைகளில் சமநிலைவாழ்வு என்று ஒரு சொல் உள்ளது. புத்தர் வியாக்கபஜ்ஜ சூத்திரத்தில் சகவாழ்வைப் பற்றி போதித்தார். அதற்கேற்ப வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரிப்பது பற்றி சமநிலைவாழ்வு மூலம் எமக்குக் கற்றுத் தருகின்றது.

குறைந்த வருமானத்தில் ஆடம்பர வாழ்க்கை வாழ்வது தவறு என்றும்;, உண்மையான புரிதல் உள்ள ஒருவர் வரவு செலவை சமப்படுத்தி தனது வாழ்க்கைத் தரத்தை வடிவமைக்க வேண்டும் என்;றும் சுட்டிக்காட்டுகின்றது.

வருமானத்திற்கு ஏற்ப செலவுகள் செய்யப்பட வேண்டும். அதைத்தான் பௌத்த பொருளாதார தத்துவம் நமக்குக் காட்டுகிறது. ஆனால், சுதந்திரம் அடைந்து 75ஆண்டுகளாக நாம் வருமானத்துக்கு ஏற்ப செலவு செய்யவில்லை. இதை நான் கூறும்போது, இந்நாட்டு அரசாங்கங்கள் வீண் செலவு செய்துள்ளன என்று நினைக்கலாம். அரசாங்கங்கள் மட்டுமல்ல. இந்த நாட்டில் உள்ள நாம் அனைவரும் அந்த தவறை செய்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரித்தானியாவுக்கு கடன்கொடுத்த சிறிலங்கா தற்போது பிச்சை எடுப்பதாக கூறியுள்ளதோடு நாட்டை மீட்பதற்கான ஒத்துழைப்பை வழங்குமாறு கோரியுள்ளார்.

இந்த நிலையில் கூட இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் அடிப்படையாக இருக்கின்ற இனப்பிரச்சினைக்கான தீர்வினை எட்டுவதற்கு தயாரில்லாத நிலையில் தான் ஆட்சியாளர்கள் உள்ளார்கள். விசேடமாக ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு அரசியலமைப்பில் உள்ளீர்க்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான தற்துணிவு இல்லாத தலைமைகளே உள்ளனர்.

அதுமட்டுமன்றி, நாடு சுபீட்சமான நிலைமையை காண்பதாக இருந்தால் உள்நாட்டில் உள்ள இன முரண்பாடுகள் களையப்பட வேண்டும். முதலீடுகளுக்கான நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும். அப்போது தான் புலம்பெயர் தமிழர்களும் முதலீடுகளைச் செய்வதற்கு முன்வருவார்கள்.

அவ்வாறன நிலைமைகள் ஏற்படுவதாக இருந்தால் நீண்டகாலமாக நீடிக்கும் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும். அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இந்த அடிப்படை யதார்த்தம்உணரப்பட்டு செயற்படுத்தப்படாத வரையில் பொருளாதார ரீதியாக மட்டுமல்ல எந்தவொரு விடயத்திலும் தேசமாக எழுச்சி அடைதல் என்பது சிறிலங்காவில் சாத்தியமான விடயமல்ல என்பதே இறுதியானது.

# 'நாம் 200' சிறுபிள்ளை வேளாண்மை

ச.பார்தீபன்

இந்தியாவிலிருந்து தமிழர்கள் (மலையகத் தமிழர்கள்) கூலிகளாக இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அம்மக்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவையை பாராட்டி, அந்த மக்களை கௌரவிக்கும் வகையில் 'நாம் 200' நிகழ்வு கடந்த நவம்பர் மாதம் 2ஆம் திகதி கொழும்பு சுதககததாச உள்ளகர அரங்கில் இடம்பெற்றது. பல மில்லியன் ரூபாய்கள் செலவில், நடத்தப்பட்ட இந்த நிகழ்வு அதன் உண்மை அர்த்தத்தை பிரதிபலித்ததா? என் கேள்வி பலருக்கு எழுந்துள்ளது? "ஒற்றுமை, பன்முகத்தன்மை, பாரம்பரியத்தின் முழக்கம்" என்பதே இந்த நிகழ்வின் தொனிப்பொருள். எனினும் உண்மையில் இந்த நிகழ்வு எதற்காக நடத்தப்பட்டது? நிகழ்வுக்கு காரணமான அந்த மக்களின் குரல் இங்கு ஒலித்ததா? அவர்கள் கௌரவிக்கப்பட்டார்களா? அவர்களின் தேவைகள், உரிகைள் தொடர்பில் இங்கு வலியுறுத்தப்பட்டதா? என பல கேள்விகள் நிகழ்வு நடந்து அடுத்த நாளே சமூக வலைத்தளங்களில் எழுப்பப்பட்டன.

'நாம் 200' தேசிய நிகழ்வாகவே ஆரம்பம் முதல் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. நீர்வழங்கல், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில், இந்தியாவின் பல அரசியல் தலைவர்களின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு இடம்பெற்றிருந்தது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன பங்கேற்ற இந்த நிகழ்வின் சிறப்பு அதிதியாக இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டிருந்தார். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நீர் வழங்கல், பெருந்தோட்ட, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட பலரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

## முதல் கோணல்!

நிகழ்வின் ஆரம்பத்தில் வரவேற்பு நடனம் ஒன்று அரங்கேறியது. எனினும் அதில் துளி அளவும் மலையகத் தமிழர்களின் அடையாளமோ, கலை, கலாசார பாரம்பரியத்தின் பிரதிபலிப்போ ஏன் தமிழர்களின் அடையாளம்கூட இருக்கவில்லை. முழுக்க முழுக்க மேலையத்தேய இசையில் (கொஞ்சம் சிங்கள இசை கலந்து) நடனம் இடம்பெற்றது. பரதம் ஆடுவதைப்போல் பெண் அலங்கரித்து நின்றார்கள் எனினும் அவர்களும் கண்டிய நடனத்துடன் இசைந்து ஏதோ ஆடிச் சென்றார்கள்.

பல நிகழ்வுகளுடன் 4 மணித்தியாலங்களுக்கு மேல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தலைமை உரையை நீர் வழங்கல், பெருந்தோட்ட, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆற்றினார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் தலைமை உரை எவ்வாறு அமைந்திருக்க வேண்டும். எனினும் எவ்வித கோரிக்கையையும் முன்வைக்காத, எவரையும் வரவேற்காத உப்புச்சப்பற்ற உரையாகவே இது அமைந்திருந்தது.

## உரைகள் சொல்லும் செய்தி

"மிகவும் கஷ்டமான சூழலில் பெரிய பங்களிப்பை மலையக மக்கள் வழங்கியிருக்கிறீர்கள். நாடு நலமாக இருக்க பெரும் தொண்டாற்றியிருக்கிறீர்கள். தேயிலை என்றாலே இலங்கை என்ற நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்கள் தமிழ் மக்களின் வளர்ச்சியும் நல்வளர்ச்சியாக அமைய வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன்." எனக் குறிப்பிட்ட இந்திய மத்திய நிதி அமைச்சர், "இந்திய அரசாங்கம் 10000 வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் திட்டத்தை இன்று ஆரம்பிக்கிறது." எனக் குறிப்பிட்டார். எனினும் இந்த மக்களுக்கு வழங்கப்படாதுள்ள உரிமைகள் குறித்து எவ்வித கருத்தையும் வலியுறுத்தவில்லை. நிகழ்விற்கு முன்னதாக நாட்டின் வடக்கு, கிழக்கில் சில நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் நிர்மலாவிற்கு மலையகத்திற்கு விஜயம் மேற்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் ஏன் எழவில்லை? என பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மிக நீண்ட உரையை ஆற்றியதோடு, "மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆனாலும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் 85 வருட பயணித்தின் போது தான் அம்மக்களுடைய அனைத்து உரிமைகளும் வென்றெடுக்கப்பட்டது." எனக் குறிப்பிட்டார். எனினும் அந்த மக்கள் இன்னமும் வீட்டுரிமை, காணியுரிமை, சுகாதார உரிமை, கல்வி உரிமை என எதுவும் இன்றி இருப்பதை அவர் மறந்துவிட்டார்போலும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற மிகப்பெரிய தொழிற்சங்கம் தன்னுடைய அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தே அன்றி வேறு எதனையும் செய்துவிடவில்லை. அவர்களது வாக்கு வங்கியை நிரப்பிக்கொள்ள அவ்வப்போது தனிவீடு, காணியுரிமை என சில இனிப்புக்களை வழங்கினார்கள் அவ்வளவுதான். 1985ஆம் ஆண்டு தனி வீட்டுக்கான அமைச்சரவைப் பத்திரத்தை அப்போதைய அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டான் சமர்ப்பித்தாராம், அப்படியெனின் இந்த 40 வருடங்களில் எத்தனை தனி வீடுகள் அமைக்கப்பட்டுள்ள என கணக்குப்போட்டால் வண்டவாளம் தண்டவாளம் ஏறும்.

"மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளும் வேலைத் திட்டத்திற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கிறது. இதனை செயற்படுத்துவதற்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது. மலையகத்தில் கம்பனி நடைமுறைகள் இல்லாமல் செய்யப்படும். மலையக மக்களுக்கு பத்து பேர்ச் காணி உறுதியுடன் வழங்கப்படும்." என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார், ரணில் விக்ரமசிங்கவின் சுமார் அரை நூற்றாண்டை நெருங்கும் அரசியல் வாழ்வில் அன்றுதான் தூக்கத்தில் இருந்து விழித்ததுபோல் மக்களின் காணியுரிமை குறித்து கருத்து வெளியிட்டார். எனினும் அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகின்றார் என்பது தொடர்பில் எவ்வித கருத்தையும் முன்வைக்கவில்லை.

இவர்களைவிட மேலும் பலர் உரையாற்றியிருந்தார்கள், அவர்கள் முக்கியமானவர்கள்தான் எனினும் எவராவது இந்த மக்கள் தமது 200 வருட வரலாற்றில் இழந்தவைகள் பற்றிக் கூறினார்களா? அல்லது அவ்வாறு கூறக்கூடிவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதா? மலையகத்தில் எத்தனையோ புத்திஜீவிகள், கற்றவர்கள் இருக்கின்றார்கள், ஏன் நல்ல பேச்சாளர்கள் இருக்கின்றார்கள், அவர்கள் யாருக்காவது ஒரு வாய்ப்பைத் தந்து, இந்த மக்கள் இழந்த உரிமைகள், வாழ்க்கைத் தொடர்பில் சில வார்த்தைகள் பேச வைத்திருக்கலாம். ஏன் ஒரு தொழிலாளியை மேடையில் ஏற்றி அழகு பார்த்திருக்க முடியாதா? இப்படி எதுவும் இடம்பெறவில்லை. உரையாற்றிய அனைவரும் தமது சுயநல அரசியலுக்கான கருத்துக்களையே முன்வைத்தனர்.

## யாருக்கு கௌரவம்?

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் மலையகத்தின் வளர்ச்சிக்கென பாடுபட்டவர்கள் என்ற பேரில் மூன்று பேர் கௌரவிக்கப்பட்டனர். சந்திரா ஷாப்டர், பி.பி. தேவராஜ் மற்றும் கே.மாரித்து ஆகிய மூவருமே இவ்வாறு கௌரவத்தை பெற்றுக்கொண்டனர். சந்திரா ஷப்டர், இவர் தமிழ் முற்போக்கு கூட்டணியில் இருந்து பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் இணைந்து கொண்டவர், பி.பி.தேவராஜ் இவரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் இராஜாங்க அமைச்சர், கே. மாரிமுத்து, இவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிர்வாக உறுப்பினர், தனிப்பட்ட ரீதியில் அவர் ஒரு சிவில் சேவை அதிகாரி அவ்வளவுதான் இவர்களை மூவரையும் மலையகத்தில் முக்கால்வாசிப் பேருக்குத் தெரியாது. காரணம் அவர்கள் செய்த சேவைகள் அப்படி.

மலையகத்தின் எத்தனையோ முக்கிய தொழிற்சங்கத் தலைவர்கள், கல்விமான் கள் உள்ளனர், அதிபர்கள் ஆசிரியர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், சட்டத்தரணிகள் இருக்கின்றார்கள் அவர்கள் எல் லாம் இவர்களின் கண்களுக்குத் தெரியலில்லையா? ஏன் உழைத்து உழைத்து ஓடாய் தேயும் ஏதோ ஒரு தோட்டத்தின் ஒரு தொழிலாளியை கௌரவித்திருக்கக் கூடாது?

## நிதி சேகரிப்பும், செலவழிப்பும்

நீர் வழங்கல், பெருந்தோட்ட, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு பல கோடிகளை இரைத்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. எனினும் இந்த நிகழ்வுக்கென அமைச்சு தனியாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டது. (ஊடகவியலாளர் சிவராஜின் பேஸ்புக் பதிவு) "அந்த நிதி என்ன நோக்கத்திற்காக சேர்க்கப்பட்டது? எவ்வளவு சேர்ந்தது? அமைச்சு கடிதத் தலைப்பினை பயன்படுத்தி அப்படி நிதி சேர்க்கலாமா? அந்த சேர்த்த பணம் உரிய காரணத்திற்காக செலவழிக்கப்பட்டதா? உரியவர்கள் பதில் சொல்வார்களா?" என பல கேள்விகளை அவர் எழுப்பியிருந்தார். மேலும் மலையகத்தின் பல பாகங்களில் இருந்தும் நிகழ்விற்கு மக்களை அழைத்து வருவதற்காக 102 பேருந்துகளுக்கு சுமார் ஏழு மில்லியனுக்கும் அதிக நிதி செலவிடப்பட்டுள்ளது. எனினும் இந்த நிதி அமைச்சினுடையதா? அல்லது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினுடையதா? என்பது ஆராயப்பட வேண்டிய விடயம்.

## என்ன செய்திருக்கலாம்?

நாம் 200 நிகழ்வு நடத்தப்பட வேண்டிய ஒன்றுதான் அதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும் இது முதலில் சரியாக திட்டமிடப்பட்டு, அந்த மக்களின் பிரச்சினைகளை அடையாளப்படுத்துகின்ற, அவற்றை இந்த உலகிற்கு முன்வைக்கின்ற ஒரு நிகழ்வாகவும், அந்த மக்களின் 200 வருட உழைப்பை கௌரவப்படுத்துகின்ற ஒரு நிகழ்வாகவும் அமைந்திருக்க வேண்டும் எனினும் மாறாக, இது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிகழ்வாக மாறி நாறியதே மிச்சம். காங்கிரஸ் என்ற ஒரு கட்சியின் அரசியல் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அரச நிதியில் ஒரு நிகழ்வு இடம்பெற்று முடிந்தமை துரதிர்ஷ்டவசமானது. மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அனைத்து அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், கல்விமான்கள், செயற்பாட்டாளர்களை ஒன்றிணைத்து, அவர்களின் ஆலோசனைகள், கருத்துகள் கேட்டறியப்பட்டு அவர்களின் பங்கேற்புடன் இது இடம்பெற்றிருக்க வேண்டும். "சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சராது" என்பது அமைச்சர் ஜீவன் தலைமையிலான 'நாம் 200' மிகச் சிறந்த உதாரணம்.



ஈழநாடு



# மாலைதீவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம்: ஒருபார்வை

**பூமிகன்**

புதிய உலக ஒழுங்கில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் மீது வல்லாதிக்க நாடுகள் பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றமை யதார்த்தமானது.

அவ்விதமான அழுத்தங்களை குறித்த நாடுகள் தாங்கிக் கொள்ளும் வரையில் பிரச்சினைகள் இல்லை. ஆனால் அழுத்தங்கள் எல்லை கடக்கின்றபோது நிலைமைகள் மோசமடைகின்றன.

குறிப்பாக, உள்நாட்டு அரசியலில் பெரும் செல்வாக்கைச் செலுத்துகின்றன. யார் ஆட்சியில் இருக்க வேண்டும், யார் ஆட்சியில் இருக்க கூடாது என்பதை தீர்மானிக்கின்றன.

இந்த நிலைமைகளானது, மறைமுகமாக அமெரிக்க, இந்திய மேற்குலக கூட்டுக்கும், சீனாவுக்கும் இடையில் பெரும் பனிப்போராக ஏற்பட்டு வருகின்றது.

அண்மைக்காலமாக தெற்காசிய வலயத்தில் இந்த நிலைமைகள் தீவிரமடைந்துள்ள. சிறிலங்கா, பாகிஸ்தான், நோபாளம், பங்களாதேஷ், பூட்டான் ஆகிய நாடகளில் இடம்பெற்ற தேர்தல்களில் வெளியான முடிவுகளுக்கு மேற்படி பனிப்போரே பின்னணியில் இருந்தது.



ஆனால், மாலைதீவில் நடைபெற்று நிறைவடைந்திருக்கும் ஜனாதிபதி தேர்தலில் வெளிப்படையாக, நான் சீன சார்பான வேட்பாளர், நான் அமெரிக்க, இந்திய சார்ப்பு வேட்பாளர் என்று பிரசார மேடைகளில் அறிவித்து போட்டியிடும் அளவிற்கு நிலைமைகள் காணப்பட்டிருந்தன.

ஆம், ஸ்திரமற்ற அரசியல் நிலைமைகள் காணப்பட்ட மாலைதீவின் ஜனாதிபதி தேர்தல் கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் எட்டு வேட்பாளர்கள் களத்தில் இறங்கியிருந்தனர். ஐந்து இலட்சம் வரையிலான மக்களுக்கு எட்டு வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டமை கூட இந்திய, சீனா வல்லாதிக்கப் போட்டியின் ஒரு வெளிப்பாடு தான்.

இருப்பினும், மாலைதீவு ஜனநாயகக் கட்சி (எம்.டி.பி.) வேட்பாளரான தற்போதைய ஜனாதிபதி இப்ராஹிம் மொஹம்மத் சோலிஹ், மாலே நகர மேயரான, மாலைதீவு முற்போக்கு கட்சி (பி.பி.எம்.) வேட்பாளர் மொஹம்மத் முய்ஸு ஆகியோருக்கு இடையில் தான் கடுமையான போட்டிகள் காணப்பட்டது.

எனினும் மூன்றாவது இடத்தில், மாலைதீவின் செல்வந்த தொழிலதிபர்களில் ஒருவரான ஜம்ஹரி கட்சியின் காசிம் இப்ராஹிம் மாலைதீவு அரசியலில் செல்வாக்கு செலுத்தும் திறன் மற்றும் இன்னும் குறிப்பாக, தேர்தல்களை திசைமாற்றும் திறன் காரணமாக எப்போதும் ஒரு தந்திரோபாயமாக செயற்படுபவராக காணப்பட்டமையால் அவர் திடீர் திருப்பங்களை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அவர், மாலைதீவின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றின் உரிமையாளரான, இருந்தமையால் தனது வாக்குகளை அதிகரிக்க தனது செறிவான பணியாளர்கள் மீதே நம்பிக்கை வைத்திருந்தார். எனினும் அவரது தேர்தல் உபாயம் இம்முறை பலிக்கவில்லை.

இந்நிலையில் பிரதான வேட்பாளர்களைப் பொறுத்தவரையில், ஜனாதிபதி இப்ராஹிம் மொஹம்மத் சோலிஹ் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் அதிகாரத்தில் இருந்து வருகின்றார். 61 வயதான அவர், தனது பதவிக் காலத்தில் இந்தியாவுடனான உறவுகளைப் பலமாகப் பேணினார்.

விசேடமாக இந்தியாவுக்கு முதலிடம்' என்ற கொள்கையுடன் அனைத்துச் செயற்பாடுகளையும் அவர் முன்னெடுத்தார். இதனால், மாலைதீவில் இந்தியாவின் செல்வாக்கு நீடித்து வந்ததோடு இந்திய சமுத்திரத்தின் முக்கிய பகுதியைக் கண்காணிக்கும் வகையில் மாலைதீவில் இந்தியா நிலைகொண்டிருந்தது.

அதுமட்டுமன்றி, தனது கடற்படை, வான்படை வீரர்களையும் களமிறக்கி தனது தேசிய பாதுகாப்புக்கு வலுச்சேர்க்கும் செயற்பாடுகளையும் இந்திய அங்கு மேற்கொண்டிருந்தது. அத்தோடு பல்வேறு துறைகளிலும் நூற்றுக்கு அதிகமான இருதரப்பு ஒப்பந்தங்களையும் இந்தியா, மாலைதீவுடன் மேற்கொண்டிருந்தது.



இவ்வாறான பின்னணியில், ஜனாதிபதி இப்ராஹிம் மொஹம்மத் சோலிஹ், தற்போதைய ஜனாதிபதி தேர்தலிலும், 'இந்தியாவுக்கு முதலிடம்;' என்ற கொள்கையையே முன்னிலைப்படுத்தி களமிறங்கினார். பிரசாரங்களில் ஈடுபட்டார். அவருக்கு துணையாக இந்தியாவின் பல்வேறு சக்திகளும் களத்தில் இறக்கப்பட்டிருந்தமை வேறுகதை.

மறுபக்கத்தில், எதிரணியின் கூட்டு வேட்பாளராக களமிறங்கிய தலைநகர் மாலேயின் மாநகர முதல்வரான மொஹம்மட் முய்ஸுவும் இலேசுப்பட்டவர் அல்லர். அவர் மாலைத்தீவு அரசியலில் ஊறிப்பொன இளம் அரசியல்வாதியாவார். மாலைதீவினை ஆட்சிசெய்த அப்துல்லா யாமீனின் காலத்தில் அரசியலுக்குள் பிரவேசித்த அவருக்கு தற்போது தான் 45 வயது.

1978 ஆம் ஆண்டு பிறந்த மொஹம்மட் முய்ஸு பிரிட்டனின் லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியலில் கலாநிதித்துவ பட்டம் பெற்றுள்ளார். அரசியலில் பிரவேசித்த உடனேயே 2013 ஆம் ஆண்டு வீடமைப்பு மற்றும் கட்டுமான அமைச்சர் பதவியைப் பெற்றவர், 2021இல் அவர் மாலே நகர மேயர் தேர்தலில் வெற்றியீட்டினார்.

அதுமட்டுமன்றி, 2013 முதல் 2018வரையில் ஆட்சியில் இருந்து தற்போது ஊழல் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அப்துல்லாஹ் யாமீனின் ஆட்சிக்காலத்தில், சீனாவின் மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சி திட்டத்தில் இணைந்து கொண்டது மாலைதீவு.

இக்காலத்தில் பல்வேறு பாரிய கட்டட நிர்மாணங்கள் அங்கே முன்னெடுப்பதற்கு சீனா பெருமெடுப்பில் நிதியளித்தது. இக்காலப்பகுதியில் குறித்த விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சராக இருந்தவர் மொஹம்மட் முய்ஸு என்ற அடிப்படையில் அவருக்கும், சீனாவின் ஜனாதிபதி ஷி ஜின் பிங் அரசுக்கும் இடையில் வலுவான இருதரப்பு உறவுகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் தான், எதிரணிகளின் கூட்டு வேட்பாளர் என்ற அடையாளத்துடன் களமிறங்கிய மொஹம்மட் முய்ஸு, 'சீனாவுடன் இணைந்த பயணம்' என்ற கொள்கையை கையிலெடுத்து பிரசாரம் செய்தார்.

ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி நடைபெற்றது. இதில், வெற்றி பெறுவதற்குத் தேவையான 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை எந்த வேட்பாளரும் பெறவில்லை.

அதையடுத்து, முதல் இரு இடங்களைப் பிடித்த தற்போதைய ஜனாதிபதி இப்ராஹிம் மொஹம்மத் சோலிஹுக்கும் மொஹம்மட் முய்ஸுக்கும் இடையே இறுதிக்கட்ட தேர்தல் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது.

இதில், இந்தியாவுக்கு ஆதரவானவராக தன்னை அடையாளப்படுத்திப் போட்டியிட்ட ஜனாதிபதி இப்ராஹிம் மொஹம்மத் சோலிஹ் 45.96 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றார்.

சீனாவுக்கு சாதகமானவராகத் தன்னை அடையாளப்படுத்தி போட்டியிட்ட கருதப்படும் மொஹம்மட் முய்ஸுக்கு 54.04 சதவீத வாக்குகள் கிடைத்தன. அதையடுத்து, நாட்டின் புதிய ஜனாதிபதியாக முகமது மூயிஸ் அறிவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் கடந்த 17ஆம் திகதி மொஹம்மட் முய்ஸு மாலைதீவின் எட்டவாது ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டார். இந்தப் பதவியேற்பு நிகழ்வுக்கு சீன ஜனாதிபதி ஷிஜிங் பிங்கின் சிறப்பு தூதுவரும் மாநிலங்களவை உறுப்பினருமான ஷெஹின் ஜிகியூன் சிறப்பு அதிதியாக பங்கேற்றுள்ளார்.

இந்த நிகழ்வுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அழைக்கப்பட்டபோதும் அவர் தவிர்க்க முடியாத காரணங்களால் தன்னால் பங்குபற்றமுடியாது என்று பதிலளித்து விட்டார். ஆனால் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் பங்கெற்றிருந்தார். அதேநேரம், அமெரிக்காவும் தன்னிலையை தக்கவைத்துக்கொள்வதற்காக சமந்தா பவரை அனுப்பியிருந்தது.

சிறிய தீவுக்கூட்டங்களைக் கொண்ட மாலைதீவின் தலைமைக்கான பதவியேற்பு விழாவில் இம்முறை தான் பெருமெடுப்பில் உலக, பிராந்திய நடுகளின் தலைவர்கள் பிரதிநிதிகள் பங்கேற்பது முதல்முறையாக உள்ளது.

இந்த நிலைமைகள் இருக்கத்தக்கதாக, ஜனாதிபதி பதவியை கையிலெடுத்துள்ள மொஹம்மட் முய்ஸு தற்போது தடாலடியான அறிவிப்புக்களை வெளியிட்டுள்ளார்.

அவர், "மாலைதீவில் இருந்து இந்திய இராணுவப் படையை வெளியேற்றுவோம், பதிலாக சீனாவையோ அல்லது வேறு எந்த அந்நிய நாட்டுப் படையையோ உள்ளே அனுமதிக்க மாட்டோம்

மாலைதீவைப் பொறுத்தவரை, நாங்கள் எங்கள் நலன்களுக்கு முதலிடம் கொடுப்பது மிகவும் அவசியம். மேலும் அனைத்து நாடுகளுடனும் இணைந்து பணியாற்றவே விரும்புகிறோம், நல்ல நேர்மையான நட்புறவைக் கொண்டிருக்க விரும்புகிறோம்.

இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவுக் கூட்டங்களுடன் மாலைதீவின் வெளியுறவுக் கொள்கையை ஈடுபடுத்த விருப்பம் இல்லை, புவிசார் அரசியல் போட்டிக்குள் சிக்கிக்கொள்ள மாலைதீவு மிகவும் சிறியது" என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், ஜனாதிபதி அலுவலக செயலாளர் முகமது பிருசுல் அப்துல் கலீல் அளித்தபேட்டியில், "சோலி ஆட்சியில் இந்தியாவுடன் செய்து கொண்ட100 க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள் மறுஆய்வு செய்யப்படும்." என்று தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இந்து சமுத்திரத்தில் சீனா தனது கடற்படையை விரிவுபடுத்துவதில் அவதானம் செலுத்தும் நிலையில் இந்தியா தடுக்க விரும்பு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பகுதியான மாலைதீவில் தனது இருப்பை நிலைநிறுத்த விரும்புகிறது. அதேபோன்று இந்தப் பகுதி ஊடாக வளைகுடாவில் இருந்து வரும் தனது வலுசக்தி விநியோகத்தையும் பாதுகாக்க சீனா எதிர்பார்க்கிறது.

கடந்த தசாப்தத்தில், மாலைதீவுக்கு இந்தியா இரு ஹெலிகொப்டர்களை வழங்கிய தோடு 2021இல் சிறிய விமானம் ஒன்றையும் வழங்கியது.

இந்நிலையில் இந்திய விமானங்களை செயற்படுத்துவது மற்றும் பராமரிப்பதற்கே மாலைதீவில் இந் தியாவின் 75 இராணுவத்தினர் நிலை கொண்டிருப் பதாக இந்திய பாதுகாப்புப் படைதெரிவித்துள்ளது.

மறுபக்கத்தில், அமெரிக்காவுக்கும் மாலைதீவில் படைத்தளமொன்று உள்ளது. அமெரிக்காவுக்கும், இந்தப் படைத்தளம் இந்தோபசுபிக் பிராந்திய செல்வாக்கில் முக்கிய பங்காற்றுகின்றது.

அதனடிப்படையில், புதிய ஜனாதிபதி மொஹம்மட் முய்ஸு வல்லாதிக்கச் சக்திகளை சமநிலைப்படுத்த முனைந்தாலோ, அல்லது ஒட்டுமொத்தமாக சீன சார்பு நிலையை கையிலெடுத்தாலோ மாலைதீவில் தொடர்ச்சியாக பூகோள அரசியல், இராஜதந்திர அனர்த்தம் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கப்போகின்றது.




















நமது ஈழநாடு வாழ்வாதர உதவித்திட்டத்தின் கீழ் இம்முறை பன்னங்கண்டி, முழங்காவில் ஆகிய இடங்களை சேர்ந்த வாழ்வதார உதவி தேவைப்படுவோருக்கு தொழில் முதலீடு துவிச்சக்கரவண்டி மற்றும் உலர் உணவுப் பொதிகள் என்பன இன்று (14) வழங்கி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் வேண்டுகோளிற்கிணங்க மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் Shashigaran Dilan அவர்களின் ரூபாய் இரண்டு இலட்சம் நிதிப்பங்களிப்பில் மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

அந்தவகையில் பன்னங்கண்டியை சேர்ந்த ஒருவருக்கு அவரது வாழ்வாதார உதவியாக சிறுகடை நடாத்துவதற்கு தேவையான ரூபாய் 50 இலட்சம் பணம் வழங்கப்பட்டது. அத்தோடு முழங்காவிலைத்சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவருக்கு அவரது கல்வி நடவடிக்கைக்காக 38 500 ரூபாய் நிதியில் துவிச்சக்கர வண்டி ஒன்றும் வழங்கப்பட்டது.

இதேவேளை தெரிவுசெய்யப்பட்ட 10 மாற்றுத்திரனாளி மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கு சங்கத் தலைவர் சரவணன், உப தலைவர் ஜெயக்குமார், செயலாளர் யோகராசா ஆகியோர் தலைமையில் உலர் உணவுப் பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

